# தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மலர்

1921-2021



# தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா



1921-2021

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம்
புனித ஜார்ஜ் கோட்டை,
தமிழ்நாடு அரசு, சென்னை – 600 009.



அய்யன் திருவள்ளுவர்

" கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி "

நல்வாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறா ஆட்சி நடத்தியும் மக்களைப் பேணிக் காப்பதே அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.



முத்தமிழறிஞர் கலைஞர்

## சமத்துவப் பிரகடனமே மக்களாட்சி!

மக்களாட்சி என்பது -
மாடி வீட்டுக்கு -
மாளிகைக்கு -
மந்தகாச வாழ்வினருக்கு மட்டுமே
எழுதி வைக்கப்பட்ட உயில் அல்ல! - அது
மாடு மேய்க்கும் மாயாண்டியும்
மண் குடிசைவாழ் மன்னாரும்
உரிமை கொண்டாடக் கூடிய
சமத்துவப் பிரகடனம்!



மேதகு திரு. **ராம் நாத் கோவிந்த்**

இந்தியக் குடியரசுத் தலைவர்

सत्यमेव जयते

राष्ट्रपति
भारत गणतंत्र
**PRESIDENT**
**REPUBLIC OF INDIA**

## MESSAGE

The centenary celebration of the Tamil Nadu legislature is indeed a momentous occasion. This legislature sowed the seeds of democracy that flourished in full bloom subsequently. It also set the template for the representative governance that embodies the true spirit of democracy. Much of the richness of Indian democracy is derived from the Tamil Nadu legislature and is appreciated all across the world.

I am also happy to know that the Tamil Nadu legislature will also include a portrait of Thiru M. Karunanidhi, much like the portraits of many great leaders such as Mahatma Gandhi, C. Rajagopalachari, B.R. Ambedkar and V. O. Chidambaram Pillai. This is a fine tribute to the stalwart who worked every moment of his life for the welfare of those living on the margins.

My best wishes to the State of Tamil Nadu for its consistent march towards progress and prosperity.

RNKovind

**(Ram Nath Kovind)**

**New Delhi**
**August 31, 2021**



மேதகு திரு. **எம்.வெங்கைய நாயுடு**

இந்தியத் துணை குடியரசுத் தலைவர்

सत्यमेव जयते

# भारत के उपराष्ट्रपति
# VICE-PRESIDENT OF INDIA

## MESSAGE

I am happy to know that the Centenary celebrations of the Tamil Nadu Legislature are being organized at Fort Saint George, Chennai on 2nd August, 2021. Completion of 100 years is indeed a major landmark in the journey of this vibrant institution of democracy, and I congratulate all present and former members, staff and the people of Tamil Nadu on this historic occasion.

Legislatures are the cornerstone of democracy as they provide the basis for the actions of the executive and the judiciary. By formulating laws and deliberating on issues of larger public concern, legislatures ensure the accountability of the government of the day and also provide policy guidance to it. They play a crucial role in socio-economic development and transformation of the nation.

However, the credibility and standing of our legislatures, of late, have declined in the public eye with disruption and unruly behavior becoming a norm rather than the exception. Therefore, it becomes imperative to uphold the 'Decency, Dignity and Decorum' of these temples of democracy through adherence to three 'Ds' namely, 'Debate, Discuss and Decide'. Legislators should set an example to others by their good conduct and consistently good performance.

The Tamil Nadu Legislature has a long and rich history that it can justly be proud of. It has been home to many a stalwart of Indian politics who enriched our vibrant democracy through their phenomenal contribution. It is a matter of happiness that a portrait of former Tamil Nadu Chief Minister and veteran leader, Dr. Kalaignar M. Karunanidhi is being unveiled on this special occasion. This would indeed be a fitting tribute to the great leader.

I am confident that in the time to come, Tamil Nadu Legislature will continue to reflect the aspirations and dreams of the people of the state.

I once again extend my heartiest greetings and best wishes to all legislators and people of Tamil Nadu. May the legislators continue to serve the people, who have elected them, in the best possible manner and improve the quality of people's lives.I am happy to know that Centenary Celebrations of the Tamil Nadu Legislature is being organized on 2nd August, 2021 at Fort Saint George, Chennai and to commemorate the event a souvenir is being published on this occasion.

**New Delhi**
**1st August, 2021.**

Naidu.
**(M. Venkaiah Naidu)**



மாண்புமிகு திரு. **நரேந்திர மோடி**

இந்தியப் பிரதமர்

सत्यमेव जयते

प्रधान मंत्री

Prime Minister

## MESSAGE

I am pleased to learn about the Centenary celebrations of Tamil Nadu Legislature. Greetings and heartiest congratulations to all the representatives and the people of the State on this landmark occasion. I recall the contributions of all those who have served in this Assembly over the years.

The 100 year evolutionary journey of Tamil Nadu Legislature is steeped in history and the festivities at Fort St. George reflect the sense of pride and joy in every person of Tamil Nadu. The journey of the Assembly is both inspiring and educating at the same time.

Rooted in age-old democratic principles of discussion and deliberation on issues of public interest, the lively debates have aimed to fulfil aspirations of the common people. The wide gamut of issues raised by the peoples' representatives showcases the glorious traditions that have been an integral part of our rich social, cultural and political traditions based on cooperation and consultation.

I am glad that a portrait of Kalaignar M. Karunanidhi Ji is being unveiled on this occasion. His vast experience in public life is admired across the nation. The Tamil Nadu Assembly has had some very distinguished members such as Thiru K Kamaraj, Thiru CN Annadurai, Thiru MGR and Selvi Jayalalithaa Ji, whose interventions on the floor of the House have been greatly respected.

Tamil Nadu Legislature has further nurtured and nourished its legacy, accommodating various hues of opinion through dialogue in its day-to-day functioning. May the Centenary celebrations of Tamil Nadu State Legislature fill the people and representatives of the State with new energy and fresh spirit to take this institution and the State to even greater heights.

The Souvenir being published on the occasion will encapsulate its splendour for the present generations and posterity. May the publication be read and liked widely.

I wish the Centenary celebrations resounding success.

**(Narendra Modi)**

New Delhi
श्रावण 11, शक संवत् 1943
August 02, 2021



மேதகு திரு. **பன்வாரிலால் புரோகித்**

தமிழ்நாடு ஆளுநர்

*Banwarilal Purohit*

सत्यमेव जयते

**GOVERNOR**
**TAMIL NADU**

**RAJ BHAVAN,**
**Chennai-600 022.**

## MESSAGE

It gives me immense pleasure to note that the Tamil Nadu Legislature, a vibrant institution of democracy has successfully completed hundred years of its glorious existence and is witnessing centenary celebrations in a grand manner on 2nd August 2021. This democratic institution has paved way for passing numerous path breaking legislations and also historical resolutions by many successive Governments, solely with a view to bring progress and peace in the life of all citizens of the State, especially the weaker sections of society. All these remarkable achievements of this institution have strengthened the democratic values and ethos.

I wish and hope that the rich traditions and legacy of Tamil Nadu Legislature would be reinforced further by the unstinted efforts of the newly elected members of the 16th Legislative Assembly reflecting the aspirations and dreams of the people.

It is also heartening to note that the portrait of great politician, former Chief Minister Dr. Kalaignar M.Karunanidhi is also being unveiled on this momentous occasion of commemoration of the centenary year and it is a befitting tribute to Dr. Kalaignar who had served for the people especially for the oppressed classes of society.

I convey my best wishes for the grand success of the centenary celebrations.

**(BANWARILAL PUROHIT)**



மாண்புமிகு திரு. **மு.க.ஸ்டாலின்**

தமிழ்நாடு முதலமைச்சர்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை 600009.

19.09.2021

## வாழ்த்துச் செய்தி

மக்களாட்சியின் மாண்பு காத்து, மக்களின் நலன் கருதிச் செயலாற்றும் தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு, நூற்றாண்டு கண்ட பெருமைமிகு வரலாறு உண்டு. ஆங்கிலேயர் ஆட்சியில் மாண்டேகு செம்ஸ்போர்டு திட்டத்தின் கீழ் 1920ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சென்னை மாகாண சட்டமன்றம் 1921 ஜனவரியில் அன்றைய பிரிட்டிஷ் ஆளுநர் வெலிங்டன் தலைமையில் பிரிட்டிஷ் இளவரசர் கன்னாட் கோமகன் அவர்களால் முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டது.

நீதிக்கட்சி என்றழைக்கப்படும் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைத்திருந்த நிலையில், அதன் முதல் அமைச்சர் கடலூர் சுப்பராயலு அவர்கள் தலைமையிலான அமைச்சரவையும் ஆளுந்தரப்பு எதிர்த்தரப்பு சட்டமன்ற உறுப்பினர்களும் கொண்ட அவை மக்களுக்கான பணியினைச் சமூகநீதி அடிப்படையில் மேற்கொண்ட வரலாற்றுச் சிறப்பினைக் கொண்டது நமது சட்டமன்றம்.

இந்திய விடுதலைக்கு முன்பும் பின்புமாக ஒரு நூற்றாண்டு காலமாக பல கட்சிகள், பல முதலமைச்சர்கள், பல நூறு உறுப்பினர்களைக் கண்ட தமிழ்நாடு சட்டமன்றம் ஜனநாயக விழுமியங்களைப் போற்றிப் பாதுகாத்து வருவதுடன், சமூக நீதியின் அடிப்படையில் சமூகநலத் திட்டங்களை அனைத்துத் தரப்பு மக்களின் நலன் கருதிச் செயல்படுத்துவதில் இந்திய ஒன்றியத்திற்கே முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது.

முழுமையான குடியரசாக இந்திய ஒன்றியம் ஆனபிறகு, தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சர்களாக மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் பக்தவத்சலம், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், அம்மையார் ஜெயலலிதா எனப் பலரும் சட்டமன்றப் பணிகளை ஆற்றியுள்ளனர்.

சென்னை மாகாணம் என்பதை மாற்றி, 'தமிழ்நாடு' என்று பெயர்சூட்டி, அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் பேராதரவுடன் அதனைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றி, தமிழர்களின் நெடுங்கனவை வென்றெடுத்தவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். சமூகநீதிப் பாதையில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக முன்மாதிரி மாநிலமாகப் பயணிப்பதற்கு அளப்பரிய பங்காற்றிய முதலமைச்சர்களில் முதல்வராக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திகழ்ந்தார்.

1957இல் முதன்முறையாகச் சட்டமன்ற உறுப்பினரான அவர், தொடர்ந்து 13 முறை சட்டமன்றத் தேர்தல் களத்தில் தோல்வியே காணாமல் வெற்றிபெற்ற சாதனைக்குரியவராக, 60 ஆண்டுகாலம் ஆளுங்கட்சி எதிர்க்கட்சி வரிசைகளில் மாறி மாறி இடம்பெற்று நீண்ட சட்டமன்ற அனுபவமும் ஆளுமையும் கொண்டவராகத் திகழ்ந்தார்.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, ஏறத்தாழ 19 ஆண்டுகாலம் நமது மாநிலத்தினைப் பல்வேறு துறைகளிலும் முதன்மை பெறச் செய்யும் வகையில் திறம்பட வழிநடத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர். இந்தியாவில் வேறெந்த மாநிலமும் நினைத்துப் பார்க்காத மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றி, பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியவர். இந்திய அரசியலின் தவிர்க்க முடியாத சக்தியாக மூத்த தலைவராக விளங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

ஒரு நூற்றாண்டு வரலாறு கொண்ட தமிழ்நாடு சட்டமன்றத்தில் 60 ஆண்டுகளுக்கும் மேலாகத் தனது பங்களிப்பினை வழங்கிச் செம்மாந்த திட்டங்கள் முதல் தமிழுக்குச் செம்மொழித் தகுதி வரை பலவற்றையும் நிறைவேற்றிய பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. சட்டமன்ற வரலாற்றிலும் தமிழ்நாட்டின் வளர்ச்சியிலும் பிரிக்க முடியாத ஆளுமையாக விளங்கியவர் அவர்.

மன்றம் வந்த தென்றலாக, கருத்துக் களத்தில் புயலாக, மாற்றாரும் மதிக்கின்ற சொற்போர் வீரராக, ஒருமுறைகூட அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படாத உரைக்கு உரிமையானவராகப் பெயர் பெற்ற ஜனநாயகப் போராளி முத்தமிழறிஞர் கலைஞர்.

தமிழ்நாடு சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழாவையும், அதன் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திறப்பு விழாவையும் 2.8.2021 அன்று ஒருங்கே கொண்டாடும் வாய்ப்பு, தமிழக மக்களின் பேராதரவினால் முதலமைச்சர் என்ற பொறுப்பினைச் சுமக்கும் என் தலைமையிலான ஆட்சிக்காலத்தில் கிடைத்ததைப் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

ஜனநாயகத்தின் பெருமை போற்றிய இவ்விழாவில், இந்தியாவின் முதல் குடிமகனான மேதகு குடியரசுத் தலைவர் திரு.ராம்நாத் கோவிந்த் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றதும், மேதகு தமிழ்நாடு ஆளுநராக இருந்த திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் தலைமை வகித்ததும், மாண்புமிகு பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள் வரவேற்றதும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் பங்கேற்றதும் என்றென்றும் நினைவில் இருக்கின்ற நினைக்கும்போதெல்லாம் உணர்ச்சிப் பெருக்கூட்டும் மிகச்சிறந்த நிகழ்வாகும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நிகழ்வை, நெஞ்சில் நிரந்தரமாக மணங்கமழும் வகையில் சிறப்புமலராக வெளியிடும் பணி பாராட்டுக்குரியது. தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப் படத்திறப்பு விழா நிகழ்வுகளை மலராகத் தொகுத்து வெளியிடும் பணியினை மேற்கொண்ட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் பேரவைச் செயலாளர் உள்ளிட்ட அலுவலர்களுக்கும், மலரைச் சிறப்பாகத் தயாரிப்பதில் பங்கேற்ற அனைவருக்கும் அன்பு கலந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றத்தின் ஜனநாயகப் பெருமையையும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சித்திறனை உள்ளடக்கிய சட்டமன்றச் செயல்பாடுகளையும் நெஞ்சில் நிறுத்தி, சமூகநீதிப் பாதையில் இந்த அரசு உறுதியுடன் தொடர்ந்து பயணித்திட இந்தச் சிறப்பு மலரின் பக்கங்கள் ஒவ்வொன்றும் பக்கபலமாகத் திகழும்.

அன்புடன்

(மு.க. ஸ்டாலின்)



மாண்புமிகு திரு. **மு.அப்பாவு**

பேரவைத் தலைவர்



सत्यमेव जयते

# अध्यक्ष, लोक सभा
# SPEAKER, LOK SABHA
# INDIA

## MESSAGE

I am pleased to know that Centenary Celebrations of Tamil Nadu Legislative Assembly to commemorate the 100 years of Tamil Nadu Legislature is being held and a Souvenir is being brought out to mark this historic and momentous event.

Tamil Nadu Legislature is one of the oldest legislative bodies in the country. Stalwarts like Thiru C. Rajagopalachari, Thiru K Kamaraj, Dr. M. Karunanidhi, Dr. MG Ramachandran, Dr. J. Jayalalithaa have made invaluable contribution in building a strong Tamil Nadu Legislature.

I hope that this souvenir would help provide great insight into the glorious history of legislature of Tamil Nadu.

I congratulate Tamil Nadu Legislative Assembly on the Commemoration of the 100th year of the Tamil Nadu Legislature and extend my best wishes for the event.

**(Om Birla)**



மாண்புமிகு திரு. **துரைமுருகன்**
பேரவை முன்னவர்



மாண்புமிகு திரு. **கு.பிச்சாண்டி**
பேரவைத் துணைத் தலைவர்



மாண்புமிகு முனைவர் **கோவி.செழியன்**

அரசுத் தலைமைக் கொறடா



மாண்புமிகு திரு. **எடப்பாடி கே.பழனிசாமி**

எதிர்க்கட்சித் தலைவர்



அமர்ந்திருப்போர் : திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், திரு. எ.வ.வேலு, திரு. ஐ.பெரியசாமி, திரு.துரைமுருகன், மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மேதகு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித், திரு. கே.என்.நேரு, முனைவர் க.பொன்முடி, திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், திரு. தங்கம் தென்னரசு

# தமிழக அமைச்சரவை 2021



நிற்போர் :

வரிசை 1: திரு. செந்தில் பாலாஜி, திரு. கே. இராமச்சந்திரன், திரு. அனிதா ஆர். இராதா கிருஷ்ணன், திரு. வெள்ளக்கோவில் மு.பெ. சாமிநாதன், திரு. கே.ஆர். பெரிய கருப்பன், திரு. எஸ். ரகுபதி, திரு. சு. முத்துசாமி, திரு. தா.மோ. அன்பரசன், திருமதி கீதா ஜீவன், திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன், திரு. அர. சக்கரபாணி, திரு. ஆர். காந்தி.

வரிசை 2: திரு. மனோ. தங்கராஜ், திரு. சிவ.வீ. மெய்யநாதன், திரு. செஞ்சி கே.எஸ். மஸ்தான், முனைவர் பி.டி.ஆர். பழனிவேல் தியாக ராஜன், திரு. எஸ்.எஸ். சிவசங்கர், திரு. மா. சுப்பிரமணியன், திரு. பி. மூர்த்தி, திரு. பி.கே. சேகர்பாபு, திரு. ஆவடி சா.மு. நாசர், திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திரு. சி.வெ. கணேசன், டாக்டர் மா. மதிவேந்தன், திருமதி கயல்விழி செல்வராஜ்




# பொருளடக்கம்


| வ.எண். | தலைப்புகள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | ஜனநாயகத்தின் வேர்களை ஊன்றி வளரச் செய்துள்ளது தமிழக சட்டமன்றம்! | மேதகு திரு.ராம்நாத் கோவிந்த், குடியரசுத் தலைவர் | 2 - 7 |
| 2 | கலைஞர் மக்களின் முதலமைச்சராகச் செயல்பட்டவர் | மேதகு திரு.பன்வாரிலால் புரோகித், தமிழக ஆளுநர் | 8 - 10 |
| 3 | ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வாழ்த்து | | 11 |
| 4 | தமிழக முதலமைச்சராக மகிழ்கிறேன்! கலைஞரின் மகனாக நெகிழ்கிறேன்! | மாண்புமிகு திரு.மு.க.ஸ்டாலின், தமிழக முதலமைச்சர் | 12 - 15 |
| 5 | குடியாட்சி முறை | பேறிஞர் அண்ணா | 16 - 18 |
| 6 | சென்னை மாநகர் புனித ஜார்ஜ் கோட்டை வரலாறு | | 19 - 26 |
| 7 | கொடிக் கம்பம் சொல்லும் கதை | | 27 - 28 |
| 8 | கேரள முதல்வர் மாண்புமிகு பினராய் விஜயன் வாழ்த்து | | 29 |
| 9 | THE LORD WILLINGDON, GOVERNOR OF MADRAS | | 30 - 35 |
| 10 | HIS ROYAL HIGHNESS THE DUKE OF CONNAUGHT | | |
| 11 | GOVERNOR OF MADRAS ON PRESENTATION OF THE PRESIDENTIAL CHAIR - SPEECHES | | |
| 12 | மாப்பிள்ளையும் மாப்பிள்ளை தோழனும்! | பேரவையில் பேறிஞர் அண்ணா | 36 - 39 |
| 13<br>14 | தியாகத்தைப் போற்றிடுவோம்! நள்ளிரவு வெள்ளிவிழா உரை – நள்ளிரவில் வெள்ளி விழா ஏன்? | முன்னாள் முதலமைச்சர் கலைஞர் | 40 - 44 |
| 15 | புதுவை முதல்வர் மாண்புமிகு ரங்கசாமி வாழ்த்து | | 45 |
| 16 | சட்டமன்ற ஜனநாயகம் பேணிப் பாதுகாப்போம் | மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் | 46 - 49 |
| 17 | THE MADRAS TEMPLE ENTRY INDEMNITY BILL, 1939 | C.RAJAJI Ex. Chief Minister | 50 - 51 |
| 18 | நேர்மையால் உங்கள் புகழ் வளர ஆசைப்படுகிறேன்! | முன்னாள் முதலமைச்சர் காமராஜர் | 52 - 53 |
| 19 | காடுகள் நம் செல்வம் அதை வளர்க்க வேண்டும் | முன்னாள் முதலமைச்சர் மு.பக்தவத்சலம் | 54 - 55 |

| | | | |
|---|---|---|---|
| 20 | "தமிழ்நாடு" பெயர் மாற்றத் தீர்மானம் | முன்னாள் முதலமைச்சர் பேறிஞர் அண்ணா | 56 - 58 |
| 21 | கொடியேற்றும் உரிமை தந்த பிரதமருக்கு நன்றி! | முன்னாள் முதலமைச்சர் கலைஞர் | 59 - 61 |
| 22 | கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்த கலைஞரைப் பாராட்டுகிறேன். | முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் | 62 - 63 |
| 23 | புதுவை துணைநிலை ஆளுநர் வாழ்த்து | திருமதி தமிழிசை சௌந்தரராஜன் | 64 |
| 24 | காங்கிரஸ் தலைவர் வாழ்த்து | திருமதி சோனியாகாந்தி | 65 |
| 25 | மொழிவாரி மாநிலங்கள் அமைய வேண்டும் | தோழர் ப.ஜீவானந்தம் | 66 - 67 |
| 26 | MY COLOURLESS BUDGET | C.SUBRAMANIAM EX.FINANCE MINISTER | 68 - 69 |
| 27 | புதியதொரு வரலாறு படைத்திடும் எனது முயற்சிக்கு ஊக்கமளித்திடுவீர் ! | மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் | 70 - 89 |
| 28 | அருந்ததியர் சமுதாயம் சார்ந்த முதல் பேரவைத் தலைவர் திரு. ப.தனபால் அவர்களைப் பாராட்டுகிறேன் | முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா | 90 - 92 |
| 29 | திரு. சரத்பவார் வாழ்த்து | தேசியவாத காங்கிரஸ் தலைவர் | 93 |
| 30 | இந்தியத் திருநாட்டை வழிநடத்திடக் கிடைத்த ஒப்பற்ற ஆயுதம் காந்திய சிந்தனைகள் | மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் | 94 - 101 |
| 31 | திரு.டி.ராஜா, இந்திய கம்யூனிஸ்ட் தலைவர் வாழ்த்து | | 102 |
| 32 | நூற்றாண்டு விழா கண்ட சென்னை மாகாண தமிழக சட்டமன்றம் | | 103 -112 |
| 33 | பேரவை கூட்டத் தொடர்கள் – ஒரு கண்ணோட்டம் | | 113 |
| 34 | சட்டமன்றப் பேரவை நடைபெற்ற இடங்கள் | | 114 -119 |
| 35 | சட்டமன்ற உறுப்பினர் விடுதிகள் | | 120-121 |
| 36 | பார் போற்றும் ஞாயிறு | மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் | 122-124 |
| 37 | பேரவைத் துணைத் தலைவர் வாழ்த்து | திரு. கு.பிச்சாண்டி | 125 |
| 38 | இந்தியக் குடியரசுத் தலைவர்கள் | | 126-127 |
| 39 | பிரதம அமைச்சர்கள் | | 128-129 |
| 40 | நூற்றாண்டு கண்ட சட்டமன்றம் | திரு. மு.அப்பாவு – பேரவைத் தலைவர் | 130-131 |
| 41 | சட்டமன்றங்கள் உருவாக்கும் சட்டங்கள் ஏன் ? | | 132-135 |
| 42 | THE ELECTIONS IN MADRAS<br>THE FIRST GENERAL ELECTIONS 30.11.1920<br>TODAY'S POLLING<br>THE MORNING SCENES | | 136-137 |
| 43 | தமிழக சட்டமன்ற வரலாற்றில் கலைஞர் ஒரு சகாப்தம் | திரு. துரைமுருகன், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் | 138-140 |
| 44 | மேதகு தமிழக ஆளுநர்கள் படங்கள் | | 141-143 |
| 45 | 1919 –ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்கீழ் அமைந்த அமைச்சரவைகள் | | 144-145 |
| 46 | 1935–ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்கீழ் முதல் பொதுத் தேர்தலுக்குப் பின் 1.4.1937 அன்று அமைந்த இடைக்கால அமைச்சரவைகள் | | 145-152 |

| | | | |
|---|---|---|---|
| 47 | இரண்டாவது பொதுத் தேர்தலுக்குப் பின் 30.4.1946 அன்று முதல் அமைந்த அமைச்சரவைகள் | | 153-171 |
| 48 | நானும் தலைவர் கலைஞரும் | முனைவர் க.பொன்முடி மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் | 172-173 |
| 49 | குடியரசு இந்தியாவில் முதல் பொதுத் தேர்தலுக்குப் பின் 10.4.1952 அன்று அமைந்த அமைச்சரவை ( 1952–1957) | | 174-181 |
| 50 | கலைஞர் சொல்லே வெல்லும் | திரு.கே.என். நேரு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் | 182-184 |
| 51 | இரண்டாவது பொதுத் தேர்தலுக்குப் பின் 13.4.1957அன்று அமைந்த அமைச்சரவை (1957–1962) | | 185-189 |
| 52 | சட்டப்பேரவைச் செயலாளர்கள் | | 189 |
| 53 | திருநாள்களும் விழாக்களும் முத்தமிழறிஞர் கலைஞரும் | திரு. எ.வ.வேலு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் | 190-193 |
| 54 | மூன்றாவது பொதுத் தேர்தலுக்குப் பின் 15.3.1962 அன்று அமைந்த அமைச்சரவை (1962–1967) | | 194-199 |
| 55 | மாண்புமிகு தமிழக முதலமைச்சர்கள் | | 200-201 |
| 56 | தனக்குவமை இல்லாத தலைவர் கலைஞர் | திரு.தங்கம் தென்னரசு மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் | 202-203 |
| 57 | நான்காவது பொதுத் தேர்தலுக்குப் பின் 6.3.1967 அன்று அமைந்த அமைச்சரவை (1967–1971) | | 204-208 |
| 58 | பேரவை முன்னவர்கள் | | 209 |
| 59 | முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் சாதனைச் சரித்திரம் | திரு. மா.சுப்பிரமணியன் மாண்புமிகு மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் | 210-211 |
| 60 | நாடாளுமன்ற உறுப்பினர்கள் 2019 | | 212-215 |
| 61 | ஐந்தாவது பொதுத் தேர்தலுக்குப் பின் 15.3.1971 அன்று அமைந்த அமைச்சரவை (1971–1976) | | 216-221 |
| 62 | காலத்தை வென்றவர் கலைஞர் | திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் | 222-223 |
| 63 | தமிழகத்தின் இன்றைய மாநிலங்களவை உறுப்பினர்கள் | | 224-225 |
| 64 | ஆறாவது பொதுத் தேர்தலுக்குப் பின் 30.6.1977 அன்று அமைந்த அமைச்சரவை (1977 – 1980) | | 226-229 |
| 65 | தமிழ்நாட்டுப் பேரவை வரலாற்றை கலைஞரை தவிர்த்துவிட்டு எழுத முடியாது | திரு. உதயநிதி ஸ்டாலின் மாண்புமிகு பேரவை உறுப்பினர் | 230-232 |
| 66 | ஏழாவது பொதுத் தேர்தலுக்குப் பின் 9.6.1980 அன்று அமைந்த அமைச்சரவை (1980–1985) | | 233-237 |

| | | | |
|---|---|---|---|
| 67 | சமூகநீதி – தொன்மையும் தொடர்ச்சியும் | திரு. த.உதயச்சந்திரன், மாண்புமிகு முதல்வரின் முதன்மைச் செயலாளர் | 238-239 |
| 68 | மாண்புமிகு பேரவைத் தலைவர்களின் படங்கள் | · | 240-241 |
| 69 | மாண்புமிகு பேரவை எதிர்க்கட்சித் தலைவர்கள் பட்டியல் | | 242 |
| 70 | எட்டாவது பொதுத் தேர்தலுக்குப் பின் 10.2.1985 அன்று அமைந்த அமைச்சரவை (1985–1988) | | 243-249 |
| 71 | பேரவையில் எனது பணிகள் | முனைவர் கி.சீனிவாசன் பேரவைச் செயலாளர் | 250-252 |
| 72 | ஒன்பதாவது பொதுத் தேர்தலுக்குப் பின் 27.1.1989 அன்று அமைந்த அமைச்சரவை (1989 – 1991) | | 253-256 |
| 73 | சட்டமன்றப் பேரவைச் செயலராகச் சில நினைவுகள் | திரு.த.ப.டில்லிதுரை பேரவை முன்னாள் செயலாளர் | 257-258 |
| 74 | பத்தாவது பொதுத் தேர்தலுக்குப் பின் 24.6.1991 அன்று அமைந்த அமைச்சரவை (1991 – 1996 ) | | 259-265 |
| 75 | புனித ஜார்ஜ் கோட்டை பேரவை மண்டபத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ள திருவுருவப் படங்கள் | | 266-269 |
| 76 | பேரவைத் துணைத் தலைவர்கள் | | 269 |
| 77 | பதினோராவது பொதுத் தேர்தலுக்குப் பின் 13.5.1996 அன்று அமைந்த அமைச்சரவை (1996 – 2001 ) | | 270-277 |
| 78 | பன்னிரண்டாவது பொதுத் தேர்தலுக்குப் பின் 14.5.2001 அன்று அமைந்த அமைச்சரவை (2001 – 2006 ) | | 278-286 |
| 79 | பதின்மூன்றாவது பொதுத் தேர்தலுக்குப் பின் 13.5.2006 அன்று அமைந்த அமைச்சரவை (2006 – 2011 ) | | 287-297 |
| 80 | பதினான்காவது பொதுத் தேர்தலுக்குப் பின் 16.5.2011 அன்று அமைந்த அமைச்சரவை (2011 – 2016 ) | | 298-307 |
| 81 | அரசுத் தலைமைக் கொறடாக்கள் (1952 – 2021) | | 307 |
| 82 | பதினைந்தாவது பொதுத் தேர்தலுக்குப் பின் 23.5.2016 அன்று அமைந்த அமைச்சரவை (2016 – 2021 ) | | 308-316 |
| 83 | அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் அரசாணை | | 317 |
| 84 | பதினாறாவது பொதுத் தேர்தலுக்குப் பின் 7.5.2021 அன்று அமைந்த அமைச்சரவை (2021 – 2026) | | 318-333 |
| 85 | தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் தோற்றமும் வளர்ச்சியும் | | 334-337 |
| 86 | தமிழ்நாடு மேலவையின் பெருமை | கலைஞரின் மேலவை உரையில் இருந்து | 338 |
| 87 | தமிழக மேலவைத் தலைவர்கள் 1920 முதல் 1986 வரை படங்கள் | | 339 |
| 88 | உலக வரலாற்றில் சட்டமன்றத்திற்குத் தலைமை ஏற்ற முதல் பெண்மணி டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி | | 340-342 |
| 89 | மேலவைத் துணைத் தலைவர்கள் | | 342 |
| 90 | குடியரசு இந்தியாவில் 1952 முதல் இடம் பெற்ற மேலவை உறுப்பினர்கள் | | 343-354 |
| 91 | அன்று ஆசிரியர்களின் எண்ணங்களை எதிரொலித்த சட்டமன்ற மேலவை | | 354 |
| 92 | நன்றி | | 355 |





## இந்திய அரசியல் சாசனம்
## முகப்புரை

இந்திய தேசத்தை, மதச்சார்பற்ற
சமதர்மக் குடியரசாக அமைப்பதற்கு
இந்திய மக்களாகிய நாங்கள்
உறுதி பூண்டு, இந்திய மக்கள்
அனைவருக்கும், சமூக,
பொருளாதார, அரசியல் நீதி,
எண்ண, எழுத, எடுத்துச் சொல்ல,
நம்பிக்கை வைக்க, வழிபாடு செய்ய
சுதந்திரம், தரத்திலும் தகுதியிலும்
வாய்ப்பிலும் சமத்துவம் ஆகியவற்றை
அளிப்பதற்கும் எங்களிடையே
தனிமனிதரின் கௌரவம்
மற்றும் தேசிய ஒற்றுமையையும்,
ஒருமைப்பாட்டையும்
உறுதியளிக்கத்தக்க
சகோதரத்துவத்தை
வளர்க்கவும் உறுதி எடுத்துக்
கொண்டிருக்கிறோம்.

எங்களது அரசியல் நிர்ணய
சபையில் 1949–ஆம் ஆண்டு
நவம்பர் திங்கள் 26–ஆம் நாள் இந்த
அரசியல் சாசனத்தை உருவாக்கி,
ஏற்றுக்கொண்டு, எங்களுக்கு
வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

## THE CONSTITUTION OF INDIA

### PREAMBLE

WE, THE PEOPLE OF INDIA,
having solemnly resolved to constitute India into a
SOVEREIGN SOCIALIST
SECULAR DEMOCRATIC REPUBLIC
and to secure to all its citizens:
JUSTICE, social, economic and political;
LIBERTY of thought, expression,
belief, faith and worship;
EQUALITY of status and of opportunity;
and to promote among them all
FRATERNITY assuring the dignity of the
individual and the unity and
integrity of the Nation;
IN OUR CONSTITUENT ASSEMBLY
this twenty-sixth day of November, 1949, do
HEREBY ADOPT, ENACT AND GIVE TO
OURSELVES THIS CONSTITUTION.

# ஜனநாயகத்தின் வேர்களை ஊன்றி வளரச் செய்துள்ளது தமிழக சட்டமன்றம்!

**மேதகு திரு. ராம் நாத் கோவிந்த்**
**இந்தியக் குடியரசுத் தலைவர்**

புனித ஜார்ஜ் கோட்டை பேரவை மண்டபத்தில் 2.8.2021 அன்று சென்னை சட்டமன்ற நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைத்தும், தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்தும் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.

“இன்றைய வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வில் கலைஞர் திரு.மு.கருணாநிதி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன். உண்மையில் இது ஒரு முக்கியத்துவம் மிக்க நாள்! முன்னர், மெட்ராஸ் சட்டமன்ற கவுன்சில்



என்று பெயரிடப்பட்டிருந்த அவையின் நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். ஆகஸ்ட் மாதம் என்பது நமது தேசிய நாள்காட்டியில் சிறந்ததொரு மாதமாகும். ஏனெனில், இது நமது சுதந்திர தினத்தின் ஆண்டு நிறைவையும் குறிக்கிறது. விடுதலைக்குப் பிறகான ஆண்டுகளில், தேசம் பல துறைகளில் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது. மக்களும் தலைவர்களும் இணைந்து மேற்கொண்ட பணிகளினால் இது சாத்தியமானது.

மெட்ராஸ் சட்டமன்ற கவுன்சிலின் வரலாறு, **1861** ஆம் ஆண்டு காலத்தையது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆலோசனை அமைப்பாக அக்காலத்தில் உருவாக்கப்பட்ட இந்த அமைப்புதான், **1921**–ஆம் ஆண்டில், சட்டத்தை இயற்றும் சட்டப்பேரவையாக உருவாக்கப்பட்டது. காலனித்துவ ஆட்சியின் கீழ், அத்தகைய அமைப்பு செயல்படுவதற்கு, பல வரையறைகளும், சவால்களும் நிச்சயம் இருந்தன. சாதி, சமூகம் மற்றும் பிற அம்சங்களின் அடிப்படையில் ஏராளமான தனித்தனி தொகுதிகள் இருந்தன. ஓரளவேயாக இருந்த போதிலும், அது ஒரு பொறுப்பான அரசாங்கத்தை நோக்கிய நகர்வாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நடைமுறையில் இருந்த ஜனநாயகம், அதன் நவீன வடிவத்தில், மீண்டும் திரும்பியது.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா, ஒடிசா, லட்சத்தீவு ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய மெட்ராஸ் பிரசிடென்சியின் மக்களால் இந்தப் புதியதொடக்கம்வரவேற்கப்பட்டது.விடுதலைப் போராட்ட இயக்கத்தால் வடிவமைக்கப்பட்ட இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்களின் கனவுகளும், விருப்பங்களும் புதிய சட்டமன்றம் மூலம் வெளிப்பட முடிந்தது. மக்கள் தங்கள் கனவுகளை நனவாக்கும் ஒரு தளமாக, ஆரம்ப கட்டத்தில் மக்கள் வாக்குகளைப் பெற்று வென்ற நீதிக்கட்சி ஆட்சி இருந்தது.

சட்டமன்ற கவுன்சில், பின்வரவிருக்கும் காலத்திற்கான பல சட்டங்களை இயற்றியது. அதன் ஆரம்ப காலகட்டங்களில் அவை பல மாற்றங்களைச் சந்தித்தன. ஜனநாயக உணர்வு மாநில சட்டமன்றத்தின் வழிகாட்டும் ஒளிவிளக்காக அமைந்தது. சமூகத்தின் நலிவுற்ற பிரிவினருக்கு அதிகாரம் அளிப்பதற்கும், ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும் நாடு முழுவதும் பிரதிபலித்த பல முற்போக்குச் சட்டங்களின் நீரூற்றாக இந்தச் சட்டங்கள் இருந்தன என்று சொல்வது தவறல்ல. மெட்ராஸ் சட்டமன்றம், ஒரு முழுமையான பிரதிநிதித்துவ ஜனநாயக வடிவ ஆட்சியாளுமைக்கான விதைகளை விதைத்தது. நாட்டு விடுதலைக்குப் பிறகு இதற்கான பலன்கள் கிடைத்தன.

ஆளுகையில் கவனம் செலுத்தி ஏழைகளை மேம்படுத்துவதற்கும், சமூகத் தீமைகளை ஒழிப்பதற்கும், ஜனநாயகத்தின் வேர்களை ஊன்றி வளரச் செய்த பெருமை இந்தச் சட்டமன்றத்திற்கு உண்டு. வறுமைக் கோட்டில் வாழ்ந்த மக்களின் நலனை இலக்காகக் கொண்டு, இப்பகுதியில், அரசியலும் நிர்வாகமும் நேர்மறையான, பகுத்தறிவு வாய்ந்த உள்ளடக்கம் கொண்டதாக உருவாயின. தேவதாசி முறையை ஒழித்தல், விதவை மறுமணம், பள்ளிகளில் மதிய உணவு, நிலமற்றவர்களுக்கு விவசாய நிலம் விநியோகம் ஆகியவை சமூகத்தை மாற்றியமைத்த சில புரட்சிகர எண்ணங்களாகும். இங்கு யார் ஆட்சி செய்தாலும் மாநிலத்தின் நலன் என்ற கருத்தாக்கமே இந்தச் சட்டமன்றத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது. தமிழ்நாட்டு மக்களின் முற்போக்குச் சிந்தனையை எடுத்துக்காட்டுகின்ற வகையில், மிகச்சிறந்த தமிழ்க்கவிஞர் மகாகவி சுப்பிரமணிய பாரதியின் ஒரு சில வரிகளை இங்கே நான் மேற்கோள் காட்ட விரும்புகிறேன்:

**“ மந்திரம் கற்போம் வினைத்தந்திரம் கற்போம்**
**வானை யளப்போம், கடல் மீனை யளப்போம்**
**சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்**
**சந்தித்தெரு பெருக்கும் சாத்திரம் கற்போம் ”**

**இதை இவ்வாறு விளக்கலாம் :**

**“வேதம், அறிவியல் இரண்டையும் கற்றுக் கொள்வோம்**

**நாம் வானத்தையும், பெருங்கடல்களையும் ஆராய்வோம்**

**நிலவின் இயல்புகள் என்னவென்று நாம் தெரிந்து கொள்வோம்**

**நமது தெருக்களைத் தூய்மையாக்குவது குறித்தும் அறிந்து கொள்வோம்”**

மண்ணின் மிகச்சிறந்த தலைமைகளைச் சட்டமன்றத்தில் கௌரவிக்கும் பாரம்பரியம் உள்ளது என்பதை அறிவது உண்மையில் மகிழ்ச்சியளிக்கிறது. திருவள்ளுவர், மகாத்மா காந்தி, சி.ராஜகோபாலாச்சாரி, சி.என்.அண்ணாதுரை, கே.காமராஜ், ஈ.வெ.ராமசாமி, பி.ஆர்.அம்பேத்கர், யு.முத்துராமலிங்கத் தேவர், முஹம்மது இஸ்மாயில் சாஹிப், எம்.ஜி.ராமச்சந்திரன்,






மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.ராம்நாத் கோவிந்த் அவர்கள் 2–8–2021 அன்று சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றினார்கள்.







மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.ராம்நாத் கோவிந்த் அவர்கள் 2–8–2021 அன்று தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு, சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்கள். இவ்விழாவில், மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு.மு.அப்பாவு, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி. திரு.சஞ்சிப் பானர்ஜி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் திரு.கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள், முக்கியப் பிரமுகர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





2–8–2021 சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருவுருவப் படத்திறப்பு விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்ட மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.ராம்நாத் கோவிந்த் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார்கள்.

ஜெ.ஜெயலலிதா, எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சி, வ.உ.சிதம்பரம் பிள்ளை, பி.சுப்பராயன் மற்றும் ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார் போன்ற பல தலைவர்களின் படங்கள் இப்பேரவையில் ஏற்கெனவே உள்ளன. இப்போது இந்தப் புகழ்பெற்ற மண்டபத்தில் தம்முடைய வாழ்நாள் முழுவதையும் மாநிலத்தின் மக்கள் நலனுக்காக அர்ப்பணித்த திரு.கருணாநிதியின் உருவப் படமும் இருக்கும்,

நான் இங்கு வந்தபோது, காந்தியடிகளின் மனசாட்சிக் காவலராகத் திகழ்ந்தவரும், சுதந்திரப் போராட்ட வீரர்களில் சிறந்த தலைவருமான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன். குடியரசுத் தலைவர் மாளிகையில் முதலில் இடம் பெற்ற இந்தியர் அவர். அவருடைய வருகை இந்த மதிப்பிற்குரிய அரங்கினையும் அலங்கரித்தது. அவர் முதல் பிரதமர் அல்லது சென்னை மாநிலத்தின் முதல்வர் ஆவார். அவருக்குப் பின் வந்தவர்களும், முன்மாதிரியாகத் திகழ்ந்த அரசியல் தலைவர்கள். இருப்பினும், ராஜாஜிக்குப் பின் வந்தவர்களில், திரு கருணாநிதி அவர்கள்தான் நீண்ட காலம் ஆட்சி செய்தார்; இதனால் தமிழ்நாட்டில் ஒரு தனி முத்திரை பதித்துச் சென்றார்.

இந்தியா, விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தபோது, 'கலைஞர்' தனது இளமைப் பருவத்திலேயே, அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார். அவர் சமீபத்தில்தான் நம்மை விட்டுப் பிரிந்தார். உயர்ந்த இலட்சியங்களுடன் கூடிய சிறுவனாக இருந்தபோது, தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஏழை எளிய மக்களுக்காக அவர் பணியாற்றத் தொடங்கியபோது, நீண்டகாலமாக வெளி நாட்டு ஆதிக்கத்தின் கீழ் இருந்த இந்தியா, அந்நிய ஆட்சியாளர்களால் சுரண்டப்பட்டு வறுமையிலும் கல்வியறி வின்மையாலும், சிக்கலில் இருந்தது. அவர் தமது இறுதி மூச்சின்போது, இந்த மண்ணும் இதன் மக்களும் அனைத்துத் துறைகளிலும் வியக்கத்தக்க முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் அடைந்துள்ளதாகத் திருப்தி அடைந்திருக்க வேண்டும். தமது நீண்ட கால, ஆக்கபூர்வமான வாழ்க்கையில் தாம் விழித்திருக்கும் ஒவ்வொரு கணத்தையும் மாநில மக்களின் சேவைக்காகவும், தேசத்தின் சேவைக்காகவும் செலவிட்டோம் என்பதும் அவருக்குத் திருப்தியளித்திருக்கும்.

தமிழ் இலக்கியம் மற்றும் சினிமாவுக்கு அவர் அளித்த பங்களிப்புகள் பற்றி நான் என்ன சொல்ல முடியும் ? எனக்குத் தெரிந்த விஷயம் என்னவென்றால், மொழி மீது ஆர்வம் கொண்ட அரசியல் தலைவர்கள் வெகு குறைவு. அவரைப் பொறுத்தவரை, அவரது தாய்மொழி வழிபாட்டுக்குரியது. தமிழ், நிச்சயமாக, மனிதகுலத்தின் மிகச்சிறந்த, மிகப் பழமையான மொழிகளுள் ஒன்றாகும். உலகம் முழுமையும் அதன் வளமான பாரம்பரியத்தில் பெருமை கொள்கிறது. ஆனால், அது செம்மொழியாக அதிகாரபூர்வ அங்கீகாரம் பெறுவதை உறுதி செய்தவர் கருணாநிதி. கலைஞர் தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு தலைவராகத் திகழ்ந்தார். நமது தேசிய இயக்கத்தின் தலைவர்களுடன் நமக்கு இருந்த கடைசி இணைப்புகளில் அவரும் ஒருவர்.

**பெரியோர்களே, தாய்மார்களே,**

விடுதலை பெற்று 75வது ஆண்டு நிறைவை நாடு கொண்டாடும்போது, இத்தகைய தலைவர்கள் குறித்தே எனது எண்ணங்கள் செல்கின்றன. நமது தேசிய இயக்கம் 1857 அல்லது அதற்கு முன்பே தொடங்கி 1947 வரை நடைபெற்றது. இந்தக் காலகட்டத்தில், தீவிரவாதிகளும்,புரட்சியாளர்களும் இருந்தனர். சமாதான வாதிகளும், அரசியலமைப்பு வாதிகளும் இருந்தனர். அவர்கள் வெவ்வேறு முறைகளைக் கொண்டு இருந்தனர். அவர்களுக்கு வெவ்வேறு தொலை நோக்குப் பார்வைகள் இருந்தன. ஆனால், அவர்கள் தாய்நாட்டின் மீது கொண்ட மதிப்பிலும், மரியாதையிலும் ஒன்றுபட்டிருந்தனர். ஒவ்வொருவரும் அவரவர் வழியில், இந்தியத் தாய்த்திரு நாட்டிற்குச் சேவை செய்யப்பாடுபட்டனர். ஓர் ஆற்றில் வெவ்வேறு கிளை நதிகள் ஒன்றிணைவது போல, அவர்கள் அனைவரும் நாட்டு விடுதலைக்காக ஒன்றிணைந்தனர்.

அவர்கள் அனைவரும் காந்திஜியில் ஒரு சங்கமத்தைக் கண்டனர். மகாத்மா காந்தி நமது கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தில் சிறந்தவைகள் அனைத்தின் ஆளுமையாகவும் திகழ்ந்தார். அது மட்டுமல்லாமல், பல மேற்கத்திய சிந்தனையாளர்களின் கருத்துகளையும் மேம்படுத்தினார். அவருடன் தேசபக்தர்கள் – வழக்கறிஞர்கள், அறிஞர்கள், சமூகச் சீர்திருத்தவாதிகள், மத, ஆன்மீகத் தலைவர்கள் மற்றும் பலர் இருந்தனர். அவர்கள்





ஒவ்வொருவரும் ஈடு இணையற்றவர்கள். டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரைப் பற்றிச் சிந்தியுங்கள். எத்துணை உயர்ந்த மேதை! எத்தகைய தொலைநோக்கு! ஆனால் வரலாற்றுப் புத்தகங்களில் எழுதப்பட்ட ஒவ்வொரு பெயருடனும், எண்ணற்ற மற்றவர்கள் பெயர்கள் பதிவு செய்யப்படவில்லை. அவர்கள் நாம் ஒரு சுதந்திர நாட்டில் வாழ்வதற்காகத் தங்கள் வசதிகளை, தொழில்களை, சில சமயங்களில் தங்கள் உயிரையே தியாகம் செய்தனர்.

அந்தச் சில பத்தாண்டுகள், பூமி இதுவரை கண்டிராத மிகச் சிறந்த தலைமுறைகளை உருவாக்கியது என்று நான் நம்புகிறேன். அவர்களுக்கு, இந்தநாடுஎப்போதும்கடன்பட்டிருக்கும். அவர்களுக்கு, நாம் செலுத்தக்கூடிய ஒரே அஞ்சலி, அவர்களின் வாழ்க்கை மற்றும் அவர்களின் இலட்சியங்களால் தொடர்ந்து ஊக்கம் பெறுவதாகும். அவர்கள் நமக்கு விடுதலையைப் பரிசளித்தனர். ஆனால், அவர்கள் நமக்கு, பொறுப்பையும் கொடுத்தார்கள். அவர்களின் தொலை நோக்குப்பார்வை வடிவம் பெறுகிறது, ஆனால், அது ஒரு தொடர்ச்சியான செயல்முறை. அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பங்கை ஆற்றியதுபோல், நாட்டைப் புதிய உயரத்திற்குக் கொண்டு செல்வதில் நாம் ஒவ்வொருவரும் நம் பங்கை ஆற்ற வேண்டும்.

நிகழ்காலத்தையும், எதிர்கால முன்னேற்றத்தையும் புரிந்துகொள்ள கடந்த காலத்துடன் தொடர்ந்து ஈடுபடுமாறு நான் இளைஞர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மகாத்மா காந்தி, சுப்பிரமணிய பாரதி மற்றும் பிறரின் வாழ்க்கையில், உங்கள் மனதில் எழும் கேள்விகளுக்கான பதில்களைக் காண்பீர்கள். நமது அண்மைக்கால வரலாற்றில் இளம் தலைமுறையினர் அதிக ஆர்வம் காட்டுவதை நான் காண்கிறேன். தெரிந்த மற்றும் தெரியாத விடுதலைப் போராட்ட வீரர்களுடன் தொடங்கிய பணிகள் தொடரும் என்ற நம்பிக்கையை அவர்கள் எனக்கு அளிக்கிறார்கள். இந்த நூற்றாண்டில் இந்தியா தனது ஞானத்தால் உலகிற்கு வழிகாட்டும்.

**பெரியோர்களே, தாய்மார்களே,**

இந்த நன்னாளில் தமிழக மக்களை வாழ்த்துகிறேன். உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகள். நன்றி. ஜெய் ஹிந்த்!

# கலைஞர்

## மக்களின் முதலமைச்சராகச் செயல்பட்டவர்!

### மேதகு தமிழக ஆளுநர்
### திரு. பன்வாரிலால் புரோகித் பாராட்டு

மாநில முதல்வர்களுக்கும், அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் கலைஞர் என்று 2–8–2021 அன்று தமிழக சட்டப்பேரவையில் நடைபெற்ற சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் படத் திறப்பு விழாவில் மேதகு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்குப் புகழாரம் சூட்டினார்கள்.



மேதகு தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அவர்கள் தமது உரையை, "அனைவருக்கும் வணக்கம்" என்று தமிழில் குறிப்பிட்டுத் தொடங்கினார்.

### ஆளுநர் ஆற்றிய உரை வருமாறு :

"தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் கலைஞர் அவர்களின் படத்திறப்பு விழாவில் பங்கேற்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். முதல்வருக்கு நன்றி!

இந்த நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெறுவதில் முக்கிய பங்காற்றிய பேரவைத் தலைவருக்கும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் எனது பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அவையில் சிறப்பாகப் பணியாற்றிச் சாதனைகள் படைத்த முக்கிய தலைவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1921–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் தமிழ்நாடு சட்டமன்றம் பல்வேறு தலைசிறந்த தலைவர்கள், முதலமைச்சர்களாக இருந்து திறம்பட ஆட்சி செய்து, இன்று நூற்றாண்டு விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

1926ஆம் ஆண்டில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி இந்த அவையில் உறுப்பினராகப் பணியாற்றியதை இங்கு நினைவு கூர்கிறேன்.

### அறிஞர் அண்ணா!

அறிஞர் அண்ணா என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பணியாற்றியபொழுது அடித்தட்டு மக்களை உயர்த்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்ததுடன் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதை ஒரு கொள்கையாகவே கடைப்பிடித்து பாடுபட்டு வந்தார்.

அண்ணா அவர்கள்தான், 'மதராஸ் மாநிலம்' என்பதை, "தமிழ்நாடு" என்று மாற்றினார். அதன்மூலம் பெரும்பாலான தமிழர்களின் விருப்பத்தை அவர் நிறைவேற்றி இருக்கிறார். அவர் போன்றவர்கள் ஒரு சிறந்த நாடாளுமன்றத் தன்மையைக் கட்டமைத்தமைக்காகத் தமிழர்கள் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ஒரு சீரிய ஜனநாயகக் கலாச்சாரத்தை ஏற்படுத்தி உள்ளனர் என்றும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

தமிழக சட்டப்பேரவைக்குப் பல்வேறு வரலாற்றுச் சிறப்புகள் உள்ளன. இந்த நாட்டின் மிகப் பெருமை வாய்ந்த சட்டமன்றங்களில் இதுவும் ஒன்று. பல்வேறு சாதனை மிக்க சட்டங்கள் இங்கு இயற்றப்பட்டுள்ளன.

### கலைஞரின் சாதனைகள்!

சமூகநீதி, மக்களின் முன்னேற்றம், சாதிப் பிரிவினைகள் அகற்றம், தீண்டாமை ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, நடுத்தர மக்களுக்கு நலத் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிமுகம் செய்து மக்களின் மனதைக் கொள்ளை கொண்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்றால், அது மிகையாக இருக்காது. தமது 14வது வயதில் பொது வாழ்விற்கு வந்த கலைஞர் அவர்கள் 1957 முதல் சட்டப் பேரவைக்குப் போட்டியிடத் தொடங்கி ஒருமுறைகூடத் தோற்காமல் கடைசிவரை உறுப்பினராக இருந்து சாதனை படைத்தவர் என்பது அவர் பெருமைக்கு மற்றுமொரு சான்று.

பன்முகச் சிறப்பு வாய்ந்த அவர் அகில இந்திய அரசியல் தலைவர்களால் கவரப்பட்டவர். பொது மக்களின் பிரச்சனைகளுக்கு முறையான தீர்வு காணக் கூடியவராக, எப்பேர்ப்பட்ட விதமான சிக்கல் வாய்ந்த பிரச்சனையாக இருந்தபோதும் அதைத் தீர்த்து வைக்கக் கூடியவராக கலைஞர் விளங்கினார்.

### தமது அரசியல் எதிரிகளையும் கவர்ந்தவர்!

நிர்வாகத் திறமை மிக்கவராகவும், பெரும் அவைகளில் விவாதங்களில் பங்கேற்பவராகவும் அவர் விளங்கினார். தமிழ் மொழியில் மிகச் சிறந்த தலைவராக விளங்கிய அவர், தமது அரசியல் எதிரிகளையும் அதன்மூலம் கவர்ந்தார் என்றே கூறலாம்.

1972–ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன்; ராஜாஜி உள்ளிட்ட ஒருசில தலைவர்களுக்குச் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றதற்காகத் தாமிரப் பத்திர விருதுகள் அறிவிக்கப்பட்டன. அப்போது, ராஜாஜி அவர்களால் அந்த விருதை நேரில் சென்று பெற இயலவில்லை. அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்களை அவரது சார்பில் பெற்றுக்கொள்ள ராஜாஜி அவர்கள், அவரிடம் தெரிவித்தார். அதன்படி விருதைப் பெற்றுக் கொண்ட முதல்வர் கலைஞர் அவர்கள் அந்த விருதை மறுநாள் உரிய மரியாதையுடன் அவர்கள் இல்லத்திற்குச் சென்று வழங்கினார்.

முதல்வர் கலைஞர் அவர்களின் அத்தகைய செயலை வெகுவாகப் பாராட்டினார் ராஜாஜி அவர்கள். லட்சக்கணக்கான மக்களின், அதிலும் குறிப்பாக




அடித்தட்டு மக்களின் உள்ளங்களில் கலைஞர் அவர்கள் குடிகொண்டிருந்தார்.

### மக்களுக்கான முதலமைச்சர்!

மக்களுக்கான முதலமைச்சர் அவர் என்று சொல்லக் கூடிய வகையில் பல்வேறு மறுவாழ்வுத் திட்டங்கள், மக்கள் நலத் திட்டங்கள், குடிசை மாற்று வாரியத் திட்டங்கள், நில மற்றவர்களுக்கு நிலம் வழங்குதல், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கியது, ஜாதி ஒழிப்புக்காகச் சமத்துவபுரங்கள் உருவாக்கியது என ஏழ்மையில் உள்ளவர்களுக்கான பலவற்றை நிறைவேற்றியவர் கலைஞர்.

பொதுவாழ்வில் எழுபது ஆண்டுகள் பணியாற்றிய கலைஞர் அவர்கள், அனைத்துக் குடியரசுத் தலைவருடனும் பழகியுள்ளார். அனைத்துப் பிரதமர்களுடனும் உரையாடி உள்ளார். எல்லாவற்றுக்கும் மேலாக, அனைத்து முதலமைச்சர்களுக்கும் பல்வேறு கட்சித் தலைவர்களுக்கும் முன்மாதிரியாக ரோல்மாடலாக கலைஞர் இருந்துள்ளார்.

பெரும் தலைவர்களான பிரதமர் மோடி அவர்களும் கலைஞர் அவர்களும் சந்தித்த அந்த தினம் எனக்கு நன்கு நினைவில் உள்ளது. அப்போது பிரதமருடன் சேர்ந்து நான் கலைஞர் அவர்களைச் சந்திக்கச் சென்றேன். அது ஒரு மிகச்சிறந்த சந்திப்பு. அப்போது மு.க.ஸ்டாலின் அவர்களே எங்களை வரவேற்று அழைத்துச் சென்றார்.

ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருந்து, மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கியவர் கலைஞர் அவர்கள். இந்த நேரத்தில் அமைச்சர் பெருமக்களும் அதிகாரிகளும் பொதுமக்களின் நலன்களுக்காக உழைக்க வேண்டும். அதன்மூலம் சமூக, பொருளாதாரத்தில் அவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்ய வேண்டும். அதனால் பல நூற்றாண்டு காலம் இந்தச் சட்டப் பேரவை சிறப்புற வேண்டும்

இன்று இந்த விழா சிறப்புற நடைபெறுவதற்குக் காரணமான முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பேரவைத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகள் அனைவருக்கும் எனது பாராட்டுகள். இவ்வாறு உரையாற்றிய ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அவர்கள் "நன்றி, வணக்கம்" என்று தமிழில் குறிப்பிட்டுத் தமது உரையை நிறைவு செய்தார்.

निर्मला सीतारामन
वित्त एवं कार्पोरेट कार्य मंत्री
भारत सरकार

सत्यमेव जयते

**Nirmala Sitharaman**
Minister of Finance and Corporate Affairs
Government of India



06 August, 2021

**MESSAGE**

Happy to note that the Centenary Celebrations of the Tamil Nadu Legislature is being organised on 2nd August, 2021 at Fort Saint George, Chennai, to mark the hundred years of its glorious heritage and democratic achievements and also its illustrious functioning.

During this period, many historical legislations were passed which helped in empowering all sections of the society and strengthening the democratic values.

It is also heartening to learn that the portrait of former Chief Minister and veteran Legislator Dr. Kalaignar M. Karunanidhi is proposed to be unveiled on this momentous occasion.

Best wishes for the success of the function.

**[ Nirmala Sitharaman ]**

**Office :** 134, North Block, New Delhi-110001 Tel. : 23092810, 23092510 Fax : 23092828
**Residence :** 15, Safdarjung Road, New Delhi - 110011, Tel. : 23793791 Fax : 23793792


கண்டு சமூக நீதி காண்போம்
GOVERNMENT OF TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS




# தமிழக முதலமைச்சராக மகிழ்கிறேன்! கலைஞரின் மகனாக நெகிழ்கிறேன்!

**திரு. மு.க.ஸ்டாலின்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

## சட்டமன்ற நூற்றாண்டு விழாவில் உரை

புரட்சிகர சீர்திருத்த தீர்மானங்களையும் சட்டங்களையும் இயற்றி, தமிழர்களின் வாழ்வில் ஒளியேற்றியவர் தலைவர் கலைஞர் அவர்கள் என்று 2.8.2021 அன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

‘‘தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா கோடிக்கணக்கான தமிழ் மக்களின் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத் திறப்புவிழா ஆகிய விழாக்களுக்குத் தலைமை விருந்தினராக வருகைபுரிந்து விழாப் பேருரை ஆற்றவிருக்கின்ற மேதகு குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் அவர்களே! விழாவுக்குத் தலைமை வகித்து, தலைமையுரை ஆற்றவிருக்கக்கூடிய மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்களே! சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதியரசர் மாண்புமிகு சஞ்சிப் பானர்ஜி அவர்களே! தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று உரையாற்றிய பேரவைத் தலைவர் மாண்புமிகு மு.அப்பாவு அவர்களே! அவை முன்னவர் அவர்களே! அமைச்சர் பெருமக்களே! நன்றியுரை ஆற்றவிருக்கின்ற பேரவைத் துணைத் தலைவர் திரு. கு.பிச்சாண்டி அவர்களே! தலைமைச் செயலாளர் அவர்களே! நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே சிறப்பு அழைப்பாளர்களே, பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்களே, முக்கியப் பிரமுகர்களே, சட்டமன்றப் பேரவைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களே, அரசு ஊழியர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### பொன்னெழுத்துகளால் பொறிக்கத்தக்க நாள் இது!

வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கத்தக்க நாளாக இந்த ஆகஸ்ட் 2 ஆம் நாள் இனிவரும் காலங்களில் சிறப்புப் பெற விருக்கிறது என்பதை நான் பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டின் வரலாற்றில் மட்டுமல்ல இந்திய வரலாற்றிலும் மிக முக்கியப் பங்கு வகிக்கும் புனித ஜார்ஜ் கோட்டைக்கு நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்கள் இன்றைக்கு வருகை புரிந்திருக்கிறார்கள். நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில் பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் நலனை முன்னிறுத்தி, வாதாடுவதில், போராடுவதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர், இந்திய ஆட்சிப் பணி கிடைத்தும், அதனை ஏற்காமல் வழக்கறிஞராகப் பணியாற்றியவர். சமூக நீதியைத் தமது வாழ்வின் இலக்காகக் கொண்டவர். இத்தனை பெருமைகளுக்கு உரிய அவர், இன்றைக்கு நம்முடைய தமிழ்நாடு சட்ட மன்றத்திற்கு வருகை தந்திருப்பது, நாமெல்லாம் பெருமைப்படத்தக்க ஒன்றாகும்.

பழமையும் வரலாற்றுச் சிறப்பும் கொண்ட இந்தச் சட்டமன்றம் கடந்த ஒரு நூற்றாண்டில் பல புதுமையான சட்டங்களை, முன்னோடித் திட்டங்களை உருவாக்கி, சமதர்ம சமூகத்தைப் படைத்திட வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது.

### 1920இல் நடைபெற்ற சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் வென்ற நீதிக்கட்சி !

1919 ஆம் ஆண்டில் மாண்டேகு செம்ஸ்போடு சீர்திருத்தங்களின் அடிப்படையில் இயற்றப்பட்ட இந்திய அரசுச் சட்டத்தின் மூலம்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அந்நாளைய மாகாண சட்டமன்றங்களில் முதன்முதலில் இடம்பெறத் தொடங்கினர். அச்சட்டமே பின்னர் மாகாணங்களில் தேந்தெடுக்கப்பட்ட அரசுகள் உருவாவதற்கு வழிகோலியது. அந்தச் சட்டத்தின்படி, சென்னை மாகாண சட்டமன்றத்துக்கு 1920ஆம் ஆண்டு முதன் முதலாகத் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலில் திராவிட இயக்கத்தின் தலைமகனான நீதிக்கட்சி வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தது.

1921ஆம் ஆண்டு, கன்னாட் கோமகன் அவர்களால் முதல் மாகாண சுயாட்சி சட்ட மன்றம் தொடங்கி வைக்கப்பட்டதன் பவள விழா நிகழ்ச்சியும், அதேபோல 1932ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் முதன் முதலாக 1937ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஏற்படுத்தப்பட்ட சென்னை சட்டமன்றப் பேரவையின் வைரவிழா நிகழ்ச்சியும், 1997ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசால் சிறப்புடன் கொண்டாடப்பட்டதை, நூற்றாண்டு விழா கொண்டாடுகின்ற இந்த வேளையில் நான் நினைவுகூர விரும்புகிறேன்.

அதே வேளையில், இந்தப் பெருமைமிகு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒருசில சட்டங்களை எடுத்துச் சொல்லவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆங்கிலேய ஆட்சிக் காலத்திலேயே மகளிருக்கு வாக்குரிமை அளிக்கும் சட்டத்தை முதன் முதலாக நிறைவேற்றிய பெருமை சென்னை மாகாணச் சட்டமன்றத்திற்கு உண்டு. அதோடு, தேவதாசி ஒழிப்புச் சட்டம், மகளிருக்கு உள்ளாட்சிப் பதவிகளில் உரிய இட ஒதுக்கீடு, பெண் குழந்தைகளைப் பாதுகாக்க சிறப்புத் திட்டம் என மகளிர் நலன் காப்பதில் நாட்டிற்கே முன்னோடித் திட்டங்களை உருவாக்கித் தந்த பெருமை கொண்டது.

### இதே சட்டமன்றத்தில் 'தமிழ்நாடு' என அண்ணா பெயர் சூட்டிய வரலாறு

அது மட்டுமல்ல; பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்னை மாநிலத்திற்கு, 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டி வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தனித் தீர்மானம் நிறைவேற்றியது; சுயமரியாதை மற்றும் சீர்த்திருத்தத் திருமணத்தைச் செல்லுபடியாக்கிடச் சட்டம் வகுத்தது; நிலச் சீர்திருத்தச் சட்டம் உருவாக்கியது, மே தினத்தை அரசு விடுமுறை ஆக்கிட வழிவகுத்தது, மாநில சுயாட்சிக்கான தீர்மானம் நிறைவேற்றியது, பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வழங்கிடச் சட்டம் கண்டது, டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் அமைத்திட சட்டம் நிறைவேற்றியது, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நிறைவேற்றியது எனப் பார் போற்றும் பல்வேறு சட்டங்களை, தீர்மானங்களை நிறைவேற்றிய பெருமை இந்தச் சட்டமன்றத்திற்கு உண்டு. சீர்மிகு இந்தச் சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழாவில் இன்றைக்கு நாமெல்லாம் பங்கேற்றுள்ளோம் என்பதே நாம் எண்ணிப் பெருமிதம் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் இரு மொழிக் கொள்கை நிலைநாட்டப்பட்ட மாபெரும் வளாகம் இது. அரசு முத்திரையில்வாய்மையே வெல்லும் எனத்தமிழ்மொழி அரியணையில் அமர்ந்து அலங்கரிப்பதையும் கண்டு மகிழ்கிறோம் நாம். மாற்றுத் திறனாளிகள், திருநங்கையர், ஏழை எளியவர் என விளிம்புநிலை மக்களின் நலன் காக்க இந்தச் சட்டமன்றம் தொடர்ந்து செயலாற்றி வருகின்றது அரை நூற்றாண்டுக்கும் மேலாக !

### ஜனநாயகக் கடமையாற்றிய கலைஞர்

நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்தச் சட்டமன்றத்தில் அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தமது ஜனநாயகக் கடமையைச் செம்மையாக நிறைவேற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நினைவுகூர்ந்து, அவரது திருவுருவப் படத்தைத் திறந்து வைத்திருப்பது அனைத்திற்கும் முத்தாய்ப்பானதாகும். 1957ஆம் ஆண்டு இந்த மன்றத்திற்கு முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, தமது கன்னிப் பேச்சில் நங்கவரம் உழவர்கள் பிரச்சினை குறித்துப் பேசி, அனைவரது கவனத்தையும் ஈர்த்து முத்திரை பதித்தவர் கலைஞர் அவர்கள். முதலமைச்சராக, எதிர்க்கட்சித் தலைவராக, அமைச்சராக, உறுப்பினராகப் பல்வேறு பொறுப்புகளில் மக்கள் பணியாற்றி, பலரது பாராட்டுகளையும், அன்பையும் பெற்றவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். கொள்கை லட்சியத்திற்குத் தீங்கு என்றால் எந்தத் தியாகத்திற்கும் தயங்காதவர் கலைஞர்.

சமூகநீதிக்கு அடித்தளம் அமைத்த மண்டல் ஆணையத்தின் அறிக்கையைச் செயல்படுத்தத் தீர்மானம், தமிழ்நாட்டின் காவிரி நதிநீர் உரிமையை நிலைநாட்ட காவிரி நடுவர் மன்றத்தை அமைக்கக் கோரும் தீர்மானம், தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை நீக்க, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டம், மாணவர்கள் உயர்கல்வி பெறுவதில் இருந்த இடர்களை நீக்க நுழைவுத் தேர்வை ஒழிக்கும் சட்டம் போன்ற பல்வேறு புரட்சிகரமான சீர்திருத்தத் தீர்மானங்களையும், சட்டங்களையும் இயற்றி, தமிழர்களின் வாழ்வில் ஒளியேற்றிய தலைவர் கலைஞர் அவர்களை அவரது 50 ஆண்டுகாலச் சட்டமன்றப் பணிகளைப் பாராட்டி நடைபெற்ற பொன்விழாவில் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றிய பொதுவுடைமைப் போராளியும், முன்னாள் மக்களவைத் தலைவருமான சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள் கொள்கைகளுக்காகவும் இலட்சியங்களுக்காகவும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு எதற்கும் தயாராக இருந்தவர் கலைஞர் என்று பாராட்டிப் பேசியதை நினைத்துப் பார்க்கும்போது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் எத்தகையதொரு மாபெரும் தலைவராக விளங்கினார் என்பது தெள்ளத் தெளிவாக விளங்கும்.

உடன்பிறப்பே உன் இயல்பு என்மீது அன்பைப் பொழிவது; என் இயல்பு உன் அன்புக்குக் கட்டுப்படுவது; நம் இயல்பு கழகத்தைக் கட்டிக் காப்பது என்று தமது காந்தக் குரலால் தமிழ்நாட்டு மக்களைக் கட்டிப்போட்டு வைத்திருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவரது திருவுருவப் படத்தைப் பார்க்கும்போது சர்.பிட்டி தியாகராயர், டி.எம். நாயர், டாக்டர் நடேசனார் தொடங்கி இனமானப் பேராசிரியர் வரையிலான பல மாபெரும் தலைவர்களின் முகங்களை நான் காண்கிறேன். முன்னாள் முதலமைச்சரான அவரது திருவுருவப் படத்தைப் பார்க்கும்போது, இன்றும் நம் முன்னால் இருந்து வழிநடத்தும் ஒரு முதலமைச்சராக அவரைக் காண்கிறேன்.

### தமிழன்னையின் தலைமகனான கலைஞர் படத்தைக் குடியரசுத் தலைவர் திறந்திருக்கிறார்

இந்தியாவின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவர் அவர்கள், தமிழன்னையின் தலைமகனான கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்ததை எண்ணி, தமிழ்நாட்டின் முதலமைச்சராக மகிழ்கிறேன் ! கலைஞரின் மகனாக நெகிழ்கிறேன் !

I take this opportunity to thank our Honourable President for gracing this House with his presence and making this historic event more special.

I also like to express my sincere gratitude to our Honourable Governor of Tamil Nadu for presiding over.

ஜனநாயக மாண்பைக் காக்கும் தமிழ்நாடு சட்டமன்றம் இன்னும் பல நூற்றாண்டு விழாக்களைக் கண்டு, அடித்தட்டு மக்களின் வாழ்வை மேம்படுத்தும் வகையில் பல்வேறு சட்டங்களை இயற்ற வேண்டும் என வாழ்த்துகிறேன்". இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்கள்.



தமிழ்ச் சமுதாயத்தின் தலைமகன்

**பேரறிஞர் அண்ணா** அவர்கள்

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர்.

# குடியாட்சி முறை

**பேரறிஞர் அண்ணா**

குடியாட்சி முறை என்பது, முற்றுப் பெறாத ஒரு செயல்திட்டம்; விறுவிறுப்பான சிந்தனையுடன் அந்தச் செயல்திட்டம் இணைந்து இருக்க வேண்டும். குடியாட்சி, முடியாட்சியை நீக்கி விட்ட இடத்திலேயே புகுத்தப்பட்டுள்ள ஓர் ஆட்சி முறை மட்டுமல்ல; மக்களின் அறிவைக் கொண்டு நடத்தப்பட வேண்டிய நேர்த்திமிக்க வாழ்க்கை முறையாகும்.

குடியாட்சி எனும் முறை, கிரேக்க நாட்டிலேதான் முதலில் மலர்ந்தது என்று அரசியல் முறைகள் பற்றிய ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இது மேனாடுகளைப் பொறுத்த வரையில் பொருத்தமான உண்மைதான் என்றாலும், பழந்தமிழகத்தில் முடியாட்சி இருந்த நிலையிலேயும் குடியாட்சி முறைகள் – குறிப்பாக சிற்றூர்களிலே – செம்மையாக இருந்து வந்தன என்பதற்கான சான்றுகள் காணக்கிடைக்கின்றன. சிறப்பானதோர் சான்று என்கின்றனர், உத்திரமேரூர் கல்வெட்டுகளைக் காட்டி.

குடிமக்கள், பல குழுக்களாக அமர்ந்து, தமது வட்டாரக் காரியங்களைக் கவனித்துக் கொண்டனர் என்றும், இத்தகைய குழுக்களில் எவரெவர் இடம் பெறுவது என்பதற்குக் 'குடவோலை முறை' இருந்து வந்ததென்றும் தெரிகிறது.

'குடஒலை முறை' என்பது, இன்று நடைபெறும் தேர்தல் முறை போன்றதே. முழுக்க முழுக்க என்று கூறுவதற்கில்லை. எவரெவர், அந்தக் குழுக்களில் இடம்பெறலாம் என்பதற்கான சில தகுதிகள் குறிக்கப்பட்டிருந்தன. அவர்கள், ஒழுக்க மிக்கவர்களாக இருக்க வேண்டும் என்று பொதுவாகக் கூறிவிடுவதுடன் அமைந்து விடுவதில்லை. அவர்களின் நெருங்கிய சுற்றத்தார்கூட அழுக்கு இழுக்கு அற்றவர்களாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தனராம்.

நான் என்ன செய்வேன்! எல்லாம் என் மகனால் வந்தது! என்று கூறிடும் கெய்ரான்கள் எழக்கூடும் என்று அறிந்திருந்தனர் போலும்!

எனவே, மேனாட்டிலிருந்து குடியாட்சி முறை தமிழகத்துக்கு வந்தது என்று கூறுவதற்கில்லை.

ஆனால், தேர்தல் முறை, கட்சிக் கண்ணோட்டம் ஆகியவைகள், மேனாட்டிலேயே தொடங்கித்தான் பல்வேறு இடங்களிலும் பரவிற்று.

குடியாட்சி என்பதற்கான ஆங்கிலச் சொல்லான (Democracy) டெமாக்ரசி என்பது இரு கிரேக்க மொழிச் சொற்களின் கூட்டு அமைப்பாகும்.

"டிமோஸ் (Demos)" என்ற கிரேக்கச் சொல்லுக்குப் பொருள் மக்கள் – குடிகள் – என்பதாகும்.

"கிரேட்டின்" எனும் கிரேக்கச் சொல்லுக்கு ஆட்சி என்பது பொருள். இந்த இரண்டு கிரேக்கச் சொற்களின் கூட்டு அமைப்பாகவே, "டெமாக்ரசி" (Democracy) என்ற ஆங்கிலச்சொல் எழுந்தது.

கிரேக்கர் நகர அரசுகளை அமைத்திருந்தனர். ஒரு நகரத்து மக்கள் அனைவரும் சந்தைச் சதுக்கத்தில் கூடி ஆட்சி முறை பற்றியும், அலுவல்கள் குறித்தும் பேசி முடிவெடுப்பர். எளிதாக முடிந்தது. ஆனால், அரசு விரிவடைய விரிவடைய, மக்கள் தாமே தம்மை ஆட்சி செய்துகொள்வது என்பது இயலாததாகிவிடவே, மக்கள் ஆட்சி செய்திட தமக்குள் சிலரைச் தேர்ந்தெடுக்கும் முறையை மேற்கொண்டனர்.

பொதுவாக, குடியாட்சி என்றதும் அதனுடைய தொடக்கமும் முடிவும் தேர்தலிலேயேதான் இருக்கிறது என்று எண்ணிக் கொள்கிறோம்—தவறாக.

தேர்தலின்போது சிலரை நமக்காகத் தேர்ந்தெடுத்து விடுவது மட்டுமல்ல, குடியாட்சி. அவர்கள் எவர்? ஏன் அவர்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்? பொறுப்பு மேற்கொண்ட பிறகு அவர்கள் அதனைச் செம்மையாக நிறைவேற்றுவார்களா என்றெல்லாம் தெரிந்து கொள்ளும் தெளிவும், விழிப்புணர்ச்சியும், அவர்கள் தவறாகச் சென்றுவிடுவரேல், அவர்களை நீக்கிடும் துணிவும் இருக்க வேண்டும். இது தேர்தலுக்குத் தேர்தல் முளைத்து, தேர்தல் முடிந்ததும் மடிந்து விடுவதாக இருந்தால், குடியாட்சி கெடும் – கோமான்கள் கிளம்பிக் கொட்டமடிப்பர்.

மக்களுடைய எண்ணத்திலேயே, குடியாட்சிக் கோட்பாடு இழைந்திருக்க வேண்டும். மக்கள், தமது செயலிலெல்லாம் குடியாட்சிக் கோட்பாட்டை மேற்கொண்டு ஒழுக வேண்டும்.

பிரச்சனைகளைப் புரிந்து கொள்ளும் தெளிவும், தமது கருத்துகளை எடுத்துக் கூறும் பயிற்சியும், அதற்கு மாறான கருத்து கூறப்படும்போது கேட்டுக் கொள்ளும் பொறுப்புணர்ச்சியும் நிரம்ப வேண்டும். சொல்லாலும், செயலாலும் எவர் மீதும் தனது ஆதிக்கத்தைப் புகுத்தக் கூடாது, ஏனெனில், அது மனித தர்மத்திற்கு அடிப்படை உரிமைக்கு உலை வைக்கும் என்ற உணர்வு இருந்தாக வேண்டும். ஏனெனில், குடியாட்சி என்பது அரசாட்சிக்கான முறைகளிலே ஒன்று என்பது மட்டுமல்ல, மனித மேம்பாட்டை, அனைவரும் சமம் என்ற நெறியைச் செயல்படுத்தும் முறையாகும்.

“நான் எவ்வாறு ஓர் அடிமையாக இருக்க மாட்டேனோ அவ்வாறே ஓர் எஜமானனாகவும் இருக்க மாட்டேன்” என்றார் ஆபிரகாம் லிங்கன்.

இந்தத் தத்துவத்தின் மீது கட்டப்படுவதே உண்மையான குடியாட்சி.

எது நல்லது எது கெட்டது என்பதைக் கண்டறியும் திறமை எல்லோருக்கும் உண்டு என்ற நம்பிக்கையின் பேரில், குடியாட்சி முறை அமைக்கப்படுகிறது.

நாம் கூறுகிறோம் என்று மிரட்டிடும் மேலோன் குரல்கேட்டு அடிபணிவோர் நிரம்பிய சமூகத்திலும் குடியாட்சி முறை நிலைத்து நிற்க முடியாது.

குழந்தாய்! நீ அறிய மாட்டாய் ! – என்று குரு கூற, “உண்மைதான் மகானே!” என்று கூறி, கட்டளைக்குக் காத்துக் கிடக்கும், சமூக அமைப்பிலே குடியாட்சி நிலைத்து நிற்காது.

நான் கருதுகிறேன், சரி எனப் பட்டால் ஏற்றுக் கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்; தவறு என்றால் எடுத்துக்காட்டு; கேட்டுக்கொள்கிறேன் என்ற பேச்சும் மனப்பாங்கும் உள்ள இடத்திலேதான் குடியாட்சி முறை பயன் தரும்.

எனவே, தேர்தல் காரியமாக மட்டும் இதனைக் கொள்ளாது, நேர்த்தியானதோர் சமூக அமைப்பைக் காணும் முறையாகவும் கொண்டிடல் வேண்டும்.

குடியாட்சி முறை செம்மையாக நடைபெற்று, சீரிய பயன் தர வேண்டுமானால், அது ஆட்சி முறையாக மட்டுமன்றி, சமூக வாழ்வு முழுவதிலும், அதுபோன்றே ஒவ்வொருவரின் தனி வாழ்விலும் கலந்து, இழைந்து, இருந்திட வேண்டும்.

இதற்கு, என்னைப் போலத்தான் அவரும்; எனக்கு உள்ள உரிமை அவருக்கும் உண்டு; என்று எண்ணிடும் மனப்பாங்கு இருந்திட வேண்டும். இந்த மனப்பாங்கு, ஜாதி, மதம் போன்றவைகளாலோ, செல்வத்தின் காரணமாகவோ, பிளவுபட்டு, பேதப்பட்டு, பல பிரிவுகளாகி உள்ள சமூகத்தில் எழாது; புகுத்தினாலும் நிலைக்காது.

எனவேதான், குடியாட்சி முறை அரசியலில் வெற்றி அளிக்க வேண்டுமென்றால், அதற்கேற்ற சமூக அமைப்பு, பேதமற்ற சமூக அமைப்பு ஏற்பட்டாக வேண்டும் என்று உணர்ந்து, மெள்ள மெள்ள அந்தப் பேதங்களைப் போக்கிடும் முயற்சியிலும் அறிவாளர்கள் முனைந்து பணியாற்றி வருகின்றனர். மனித மேம்பாட்டை மாய்த்திடும் பேதம் நிரம்பிய சமுதாயத்தில் ‘ஆளுக்கு ஒரு ஓட்டு’ என்ற அளவுக்கு மட்டும் குடியாட்சிக் கோட்பாட்டைப் புகுத்தி நடைமுறைப்படுத்திப் பார்ப்பது, பச்சை மண்பாண்டத்தில் தண்ணீர் பெய்திடும் பேதமை போன்றது.

“ஓட்டு” பெற்றிருப்பதில் மட்டும், நாம் அனைவரும் சமம்; மற்றவற்றில் பேதங்கள் இருக்கலாம்–இருக்கிறது–இருக்கட்டும்–என்று கூறிக்கொண்டு, குடியாட்சி முறையை நடைமுறைப்படுத்தும் போக்கு, ஒன்றின்மேல் ஒன்றாகச் செங்கற்களை வைத்து விட்டால் நெடுஞ்சுவர் அமைந்துவிடும் என்று எண்ணிடும் போக்காகும். ஒன்றோடொன்று பொருந்தி நிற்க, தனித்தனிக் கற்களின் வலிவும் கூட்டாகி பொது வலிவு காண, சாந்து இட வேண்டும்.

ஆகவே, குடியாட்சி முறையை மேற்கொள்ளும் நாடு, பேதமற்ற சமூக அமைப்பையும் பெற்றாக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டு விடுகிறது. இன்று அத்தகைய சமூக அமைப்பு இல்லை; ஆனால் அத்தகைய சமூக அமைப்பு ஏற்பட்டாக வேண்டும் என்பதனை வலியுறுத்தாத முற்போக்காளர் இல்லை; அவர்கள் இன்னமும் முழு வெற்றி பெற்றிடவில்லை, ஆயினும், அவர்களின் பணி பயனளித்துக் கொண்டுவரத்தான் செய்கிறது.”

# சென்னை மாநகர் புனித ஜார்ஜ் கோட்டை வரலாறு

வாணிகத்தலைமையிடமாகத் தொடங்கி ஒரு மாநிலத்தின் தலை நகராகவும், தென்னகத்தின் முதன்மை நகரமாகவும் வளர்ந்து ஓங்கிய பெருமை சென்னை மாநகரைச் சாரும். பண்டைக் காலந்தொட்டே உரோமானியர்கள், கிரேக்கர்கள் தமிழ் நாட்டுடன் வர்த்தகத் தொடர்பு வைத்திருந்தனர் என்பது பல்வேறு இலக்கியங்கள் மூலமும் அகழ்வாய்வுகளின் மூலமும் வெளிப்பட்டது.

பிற்கால வரலாற்றிலும் இந்திய வாசனைத் திரவியங்களுக்கு குறிப்பாக, மிளகு, இலவங்கம், ஏலக்காய் போன்ற பொருட்களுக்கு வெளிநாடுகளில் அதிக கிராக்கி இருந்தது. துணி நூல் ஆடைகளும் மலிவாக விளங்கின. சிறந்த வர்த்தகத் தொடர்புகளைத் தேடிப் பல்வேறு நாட்டினரும் நமது நாட்டின் கடற்கரைகளை வந்தடைந்தாலும், போர்ச்சுக்கீசியர்கள் அதில் முன்னணியில் இருந்தனர்.



கி.பி.15–ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பக்கம் தமது கவனத்தைச் செலுத்திய அவர்கள் 1522–ஆம் ஆண்டு கிழக்குக் கடற்கரையில் சாந்தோம் பகுதியில் குடியேறினர். அவர்களை டச்சுக்காரர்களும், டேனியர்களும், பிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் பின் தொடர்ந்தனர்.

### பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி தோன்றியது எப்படி ?

ஒரு கால கட்டத்தில் டச்சுக்காரர்கள் மிளகின் விலையை மிக அதிக அளவுக்கு உயர்த்தியதால் இங்கிலாந்தைச் சேர்ந்த 24 வணிகர்கள் சேர்ந்து பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியைப் புதிதாகத் தொடங்கினார்கள். அந்தக் கம்பெனியின் பெயரில் இந்தியாவுடன் வர்த்தகம் செய்ய முனைந்தனர்.

முதலில் மேற்குக் கடற்கரை சூரத் நகரில் தமது தொழிற்சாலைகளை அமைத்து, பின்னர் படிப்படியாகக் கிழக்குப் பக்கம் அமைந்த சோழமண்டலக் கடலோரத்தையும் அவர்கள் பயன்படுத்தத் தொடங்கினர்.

இப்போதைய ஆந்திர மாநிலத்தில் உள்ள மசூலிப்பட்டினத்தில் அவர்கள் ஓர் ஆலையை நிறுவினர். பிறகு டச்சு ஆலைகளும் அவர்களது ஆலயங்களும், கல்லறைகளும் அமைந்த பழவேற்காட்டுக்கு அருகில் ஒரு தொழிற்சாலையை நடத்த முனைந்து, பல தொல்லைகள் ஏற்படவே ஒரு தகுதியான புதிய இடத்தைத் தேடித் தெற்கு நோக்கிச் சென்னைக்கு வந்தனர்.

### புனித ஜார்ஜ் கோட்டை கட்டுவதற்கான இடம்

சென்னையில் கடற்கரையோரம், ஒருபுறம் கூவம் நதியாலும், வடக்கில் அக்காலத்தில் பாய்ந்த எழும்பூர் நதியாலும் சூழப்பட்ட ஒரு மணல் பரப்பு அவர்களது கவனத்தை ஈர்த்தது.

அந்நிலையில் 1640 – ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20–ஆம் நாள் பிரான்சிஸ்டேயும் மற்றவர்களும் சென்னை வந்தனர். கம்பெனியின் அலுவலரான திரு.பிரான்சிஸ்டே என்பவர் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியாலும், அவரது உயர் அதிகாரி ஆண்ட் ரூ கோகன் என்பவர் அளித்த ஊக்கத்தாலும் சுமார் 5 கி.மீ. நீளமும், 2 கி.மீ. அகலமும் உள்ள அத்திட்டு கம்பெனிக்குக் கிடைத்தது. டேயின் இந்திய உதவியாளரான பேரி திம்மண்ணா என்பவர் உதவியோடு, விஜயநகர அரசின் உள்ளூர் நிர்வாகிகளாக இருந்த பூவிருந்தவல்லி நாயக் சகோதரர்களான திரு. அய்யப்ப தாமர்லா மற்றும் வெங்கடாத்ரி ஆகியோரிடமிருந்து இப்பகுதி பெறப்பட்டது.

### பிரான்சிஸ்டே கட்டிய புனித ஜார்ஜ் கோட்டை

பிரான்சிஸ் டே தமது சொந்தப் பணத்தைச் செலவழித்துத் தற்போது தலைமைச் செயலகத்தில் உள்ள அணிவகுப்பு மைதானம் (Parade Ground) இருக்கும் இடத்தில் ஃபோர்ட் ஹவுஸ் (Fort House) என்ற ஒரு சிறிய கட்டடத்தைக் கட்டினார். 1640–ல் புனித ஜார்ஜ் தினமான ஏப்ரல் 23 அன்று அக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதால் அதற்கு, “புனித ஜார்ஜ் கோட்டை” எனப் பெயரிடப்பட்டது.

அதைச்சுற்றி ஆங்கிலேய வணிகர்கள் வீடுகளைக் கட்டிக்கொண்டு குடியேறினர். ஒரு கத்தோலிக்க வழிபாட்டு மையமும் அமைக்கப்பட்டது. அவற்றைச் சுற்றி மதில்கள் அமைக்கப்பட்டன.

கோட்டைக்குள் வெள்ளையர்கள் வாழ்ந்த பகுதி வெள்ளையர் நகரம் என்றும் வெளியே வடக்குப் பகுதியில் உள்ளூர் கலைஞர்கள், நெசவாளர்கள் வாழ்ந்த பகுதி கருப்பர் நகரம் என்றும் அழைக்கப்பட்டது. சில ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது என்.எஸ்.சி. போஸ் சாலையாக உள்ள பகுதி அங்காடியாக அமைந்து, அதற்கு வடக்கில் ஜார்ஜ் டவுன் உள்ள பகுதி புதிய கருப்பர் நகரமாக வளர்ந்தது.

### ஆங்கிலேயர் ஆதிக்கம் வளர்ந்த முறை

1640–இல் ஆங்கிலேயர்கள் வந்தாலும், முதலில் அவர்களின் பணி வர்த்தகமாகவே இருந்தது. பிறகு படிப்படியாக தங்களது கோட்டை எல்லைக் குள்ளும் அருகிலும் நடைபெற்ற குற்றங்களில் தலையிட்டு நீதி வழங்கியதில் தொடங்கி, கொஞ்சம் கொஞ்சமாக அவர்களது ஆதிக்கமும் ஆட்சியின் பலமும் அதிகாரிக்கத் தொடங்கியது. கம்பெனியின் ஏஜெண்டுகளும், பிரசிடெண்டுகளும் இருந்த இடத்தில் 1661 பட்டயச் சட்டத்தின் மூலம் ஆளுநர் நியமிக்கப்பட்டார்.

### கம்பெனியின் முதல் ஆளுநர்

திரு.ஜார்ஜ் பாக்ஸ்கிராப்ட், கம்பெனியால் முதலில் ஆளுநராக நியமிக்கப்பட்டார். எனினும் குறுகிய காலத்தில் விண்டர் என்பவரால் அவர் சிறையிலிடப்பட்டார். ஆனாலும் அவர் மீண்டும் 1667–ல் ஆளுநராகப் பொறுப்பேற்றார்.

### மதராஸ்—சென்னை

ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்பே, சாந்தோம், மயிலை, திருவல்லிக்கேணி, பூவிருந்தவல்லி, எழும்பூர் போன்றவை தனித்தனி கிராமங்களாக விளங்கிவந்தன. கோட்டை அமைந்த நேரத்தில் அதற்கு நிலத்தை வழங்கிய பூவிருந்தவல்லி நாயக்குகள் தங்களது தந்தையான சென்னப்பாவின் பெயரே வெள்ளையர்கள் குடியேறும் இடத்திற்கு வைக்கப்பட வேண்டுமென்று விரும்பினர். அது முழுமையாக நிறைவேறவில்லை. அந்நேரத்தில் மதராஸ்பட்டினம், சென்னைப் பட்டினம் என்ற இடங்களே இருந்ததாகத் தெரிகிறது. எனினும், ஆங்கிலேயர்களின் குறிப்பேடுகளில் 'மதராஸ்' என்ற பெயரே குறிப்பிடப்பட்டு வந்தது. அதற்குச் சிறப்பான தனிக் காரணம் புலப்பட வில்லை. இறுதியில், "சென்னை" என்ற பெயரே தமிழிலும் பிற மொழிகளிலும் நிலைத்துள்ளது.

### புனிதமேரி ஆலயமும் இராபர்ட் கிளைவ் – யேல் திருமணங்களும்

இப்பகுதியில், விஜயநகர அரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் கோல்கொண்டா சுல்தானின் ஆளுகையும், பின்னர் ஔரங்கசீப் ஆளுகையும் ஏற்பட்டன. முதலில் "டே" அமைத்த சிறிய கோட்டை பின்னர் விரிவாக்கம் செய்யப்பட்டது. முதலில் திருவல்லிக்கேணி கிராமம் 1676—இல் கோல்கொண்டா சுல்தானிடம் இருந்து வாங்கப்பட்டது. அக்காலத்தில் சென்னையில் உள்ளூர் மக்களுக்கான Choultry Court எனப்படும் நீதிமன்றங்களே இயங்கி வந்தன. 1678—இல் ஆளுநர் ஸ்டிரேயின்ஷாம் மாஸ்டர் என்பவர் Superior Court என்ற மேல் நீதிமன்றத்தை அமைத்தார். இக்காலத்தில்தான் கோட்டை வளாகத்தில் மிகத் தொன்மையான புனித மேரி ஆலயமும் கட்டப்பட்டது. இந்த புராட்டஸ்டண்ட் கிறித்துவ ஆலயத்தில் 1680—இல் கவர்னர் திரு.எலிஹுயேல் அவர்கள் திருமணமும், 1753—இல் இராபர்ட் கிளைவின் திருமணமும் நடந்துள்ளன.

### அண்ணா அவர்களைப் பெருமைப்படுத்திய யேல் பல்கலைக்கழகம்

இந்த யேல் என்பவர் சென்னையில் கவர்னராக இருந்தபோது, இங்குச் சம்பாதித்த பொருள்களை விற்று அமெரிக்காவில் நியூ ஹெவன் என்னும் இடத்தில் இருந்த யேல் பல்கலைக்கழகம் பொருளாதார நெருக்கடியால் தத்தளித்துக் கொண்டிருந்தபோது அதற்கு உதவினார். ஆகவே, அப்பல்கலைக்கழகத்திற்கு யேல் பல்கலைக் கழகம் எனப் பெயரிட்டுச் சிறப்பித்தனர். 1968 மே திங்களில் தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களை யேல் பல்கலைக்கழகம் விருந்தினராக வரவேற்று, "சப்ஃ பெலாஷிப்" என்னும் பட்டம் வழங்கி அண்ணா அவர்களைப் பெருமைப்படுத்தியது. யேல் பல்கலைக்கழக வரலாற்றில் அமெரிக்கர் அல்லாத வெளிநாட்டினர் ஒருவருக்கு சப்ஃ பெலோஷிப் விருது வழங்கியது அண்ணா ஒருவருக்கு மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆளுநர் யேல்

யேல் 1687 முதல் 1692 வரை ஆளுநராக இருந்தார். தேக்கு மரத்தாலான, ஆசியாவிலேயே மிக உயர்ந்த கோட்டைக் கொடி மரத்தில் இவர் காலத்தில் கம்பெனிக் கொடிக்குப் பதிலாக பிரிட்டிஷ் கொடி பறக்க விடப்பட்டது. யேல் அவர்கள் காலத்தில் போர்டோ நோவோ, கடலூர், குனிமேடு போன்ற இடங்களில் தங்குமிடம் அமைக்கவும், வர்த்தகம் செய்யவும் மராத்தியர்களிடமிருந்து உரிமை பெறப்பட்டது. எழும்பூர், புரசைவாக்கம், தண்டையார் பேட்டை போன்ற கிராமங்கள் மன்னர் ஔரங்கசீப் அரசிடமிருந்து குத்தகைக்குப் பெறப்பட்டன. பின்னர் 1720—இல் இது முழுமையாகச் சொந்தமாக்கப் பட்டது.

### இந்தியாவின் முதல் மாநகராட்சியும் ரிப்பன் மாளிகையும்

1688—இல் வளர்ந்து வந்த மாநகரத்தின் தேவைகளைக் கவனிக்க தனி அமைப்பு அவசியம் என்பது உணரப்பட்டு இந்தியாவிலேயே முதன் முதலாக சென்னையில் மாநகராட்சி தொடங்கப்பட்டது. நதேனியல் ஹிக்கின்சன் முதல் மேயராகப் பொறுப்பேற்றார். பின்னாளில் இவர் ஆளுநராகவும் நியமனம் பெற்றார். மேயரின் கீழ் 12 ஆல்டர்மென் என்ற உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டனர். அவர்களில் மூவர் இந்தியர். அப்போதிருந்த சென்னை நகரம் 8 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டது. எனினும், மாநகராட்சி 1856—இல்தான் முழுமையாகச் செயல்படத் தொடங்கியது. மேயர் பதவி பின்னர் ஒழிக்கப்பட்டது. 1913—ல் எழிலார்ந்த ரிப்பன் கட்டடம் திறக்கப்பட்டு மாநகராட்சி அங்கிருந்து செயல்படத் தொடங்கியது. மாநகராட்சி ஆணையர்கள் 1919 முதல் மன்ற உறுப்பினர்கள் என அழைக்கப்பட்டனர். 1983—இல் மேயர் பதவி மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டபோது







திரு.முத்தையா செட்டியார் முதல் இந்திய மேயரானார். அவர் அளித்த மேயர் இருக்கையே இன்று மாநகராட்சி மன்றத்தை அலங்கரிக்கிறது.

### புதிய கட்டடம்

பிரான்சிஸ்டே கட்டிய "ஃபோர்ட் ஹவுஸ்" இடிக்கப்பட்டு, 1695–இல் கிழக்கே, தற்போது தலைமைச் செயலகம் அமைந்திருக்கும் வளாகத்தின் நடுவே பெரிய அடுக்கு மாடிக் கட்டடம் கட்டப்பட்டு, அதில் ஆளுநரின் இல்லமும், அலுவலகமும் அமைக்கப்பட்டன. 1708–இல் சாத்தான்காடு, வியாசர் பாடி, கத்திவாக்கம், நுங்கம்பாக்கம், திருவொற்றியூர் ஆகிய கிராமங்களும் ஆங்கிலேயர் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. 1734இல் நெசவாளர்கள் இருப்பிடமாகச் சிந்தாதிரிப்பேட்டை அமைக்கப்பட்டது. 1742–இல் வேப்பேரி, எண்ணூர் போன்றவையும் பிரிட்டிஷ் ஆட்சிக்குக் கொண்டுவரப்பட்டன.

### ஆங்கிலேயர் – பிரெஞ்சுக்காரர் மோதல்

1700 முதல் 1774 வரை புனித ஜார்ஜ் கோட்டையே இந்தியாவில் ஆங்கிலேயர்களுக்குத் தலைமை இடமாக விளங்கியது. அதன்பிறகு கொல்கத்தா தலைநகரமானது. இதற்கு முன்னர் 1746 முதல் 1749 வரை கோட்டையைப் பிரெஞ்சுக்காரர்கள் ஆக்கிரமித்தனர். அப்போது இராபர்ட் கிளைவும் பிடிபட்டார். எனினும், அவர் தப்பியபின் கடலூரில் இருந்த டேவிட் கோட்டைக்காகப் போரிட்டுப் பல வெற்றிகளைப் பெற்றபின் 1749–இல் கிளைவ் சென்னை திரும்பினார். அப்போது கோட்டையின் பொறுப்பாளரானார். பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து கோட்டையைப் பாதுகாத்து வலுப்படுத்துவதற்காக ஆங்கிலேயர் கோட்டைப் பாதுகாப்பை அதிகரித்தனர். கோட்டையின் வடக்கே ஓடிவந்த எழும்பூர் ஆற்றின் பாதையை மாற்றி அதனை ஓர் அகழியாக்க முயற்சி மேற்கொண்ட நிலையில், மீண்டும் பிரெஞ்சுக்காரரான லாலி என்பவரால் 1758–1759–இல் கோட்டை முற்றுகையிடப்பட்டது. பிரெஞ்சுக்காரர்கள் கோட்டையிலிருந்து 32 கரும்படிகத் தூண்களைப் புதுவைக்கு எடுத்துச் சென்றனர். அந்தத் தூண்களை 1761இல் ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து மீட்டுக் கொண்டு வந்தனர். முற்றுகையின்போது கோட்டையிலிருந்த கல்லறைகளுக்கும் புனித மேரி ஆலயத்தின் அருகிலமைந்த கல்லறைக் கற்களுக்கும் சேதம் ஏற்பட்டது. பிரெஞ்சு முற்றுகை முடிந்த பின்னர் பலத்த சேதம் அடைந்த கோட்டையைப்

புனரமைத்துப் பலப்படுத்தும் பணி 1783 வரை நடைபெற்றது. பழைய கருப்பர் நகரத்தின் பகுதி முழுவதும் தரைமட்டமாக்கப்பட்டு பீரங்கிகள் நிறுத்தக் கூடிய இடமாக மாற்றப்பட்டது. அதன் பின்னர் விரிவுபடுத்தப்பட்ட கோட்டை வடிவத்தில் பெருத்த மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. தற்போதும் கோட்டை வளாகத்திற்குள் வெல்லஸ்லி இல்லம், முன்னர் அட்மிரால்டி நீதிமன்றங்கள் நடந்த கிளைவ் இல்லம், டவுன் ஹால், ஆங்கிலேயர் படைகள் தங்கிய பாரக்ஸ் கட்டடங்கள் ஆகியவை உள்ளன.

### இன்றைய தலைமைச் செயலகக் கட்டடம்

1695–இல் கட்டப்பட்ட ஆளுநரது அலுவலகத்தை ஒட்டி பக்கவாட்டில் பின்னர் படிப்படியாகக் கட்டடங்கள் எழுப்பப்பட்டு அவை இப்போதுள்ள தலைமைச் செயலகக் கட்டடமாக உருவெடுத்தது. 1910–இல் சட்டமன்ற மண்டபம் கட்டப்பட்டபோது, முன்னர் பிரெஞ்சுக்காரர்களால் எடுத்துச் செல்லப்பட்டு, பின் மீட்கப்பட்ட 32 கரும்படிகத் தூண்களில் 20 தூண்கள் கட்டடத்தின் பகுதியாக அமைந்து அழகு சேர்த்து வருகின்றன.

### கோட்டை அருங்காட்சியகக் கட்டடம்

கோட்டைக்குள் கிழக்குப் புறம் உள்ள கோட்டை அருங்காட்சியகக் கட்டடம் 1790–இல் கட்டி முடிக்கப்பட்டது. முதலில் அங்கு மதராஸ் வங்கியின் அலுவலகம் இருந்து வந்துள்ளதாகத் தெரிகிறது. வணிகர்கள் கூடி ஆலோசிக்கும் இடமும் அங்கே அமைந்திருந்தது. 1796–இல் இக் கட்டடத்தின் மேல் சென்னையின் முதல் கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டது. 1841 வரை செயல்பட்ட அக்கலங்கரை விளக்கம் பின்னர் எஸ்பிளனேட்டிற்கும் பிறகு உயர் நீதிமன்றக் கட்டடத்தில் அமைந்த உயர்ந்த கோபுரம் ஒன்றிற்கும் மாற்றப்பட்டது. கோட்டை அதிகாரிகளின் உணவகமாகப் பின்னர் செயல்பட்டுவந்த இக்கட்டடம் 1948–இல் அருங்காட்சியகமாக மாற்றப்பட்டது. ஆங்கிலேயர் காலத்து வரலாற்றை எடுத்துரைக்கும் பழைய படங்கள், படைக்கலன்கள், பழைய ஆயுதங்கள், நாணயங்கள், ஏடுகள், சீருடைகள், வேலைப்பாட்டுடன் அமைந்த செம்புப் பாத்திரங்கள், சிலைகள் போன்றவை இங்குப் பார்வைக்கென வைக்கப்பட்டுள்ளன.

### பெரியார் பாலம் – அண்ணா சாலை

கோட்டையின் வடக்கிலிருந்த எழும்பூர் ஆற்றின் போக்கை மாற்றியமைத்த பின்னர், 1715–இல் பாலம் ஒன்று அமைக்கப்பட்டது. அதுவே, இப்போது விரிவடைந்து பெரியார் பாலமாக உள்ளது. அடுத்து, சென்னையின் முக்கிய சாலையாக விளங்கிய மவுண்ட் ரோட் என்று அழைக்கப்பட்ட இன்றைய அண்ணாசாலை விரிவுபடுத்தப்பட்டது. அப்பகுதியில் ஆங்கிலேய உயர்குடி மக்களும் அதிகாரிகளும் தங்கள் நேரத்தைச் செலவிடும் கடைகளும், பொழுதுபோக்கு மையங்களும் (கிளப்ஸ்) தோன்றின. பிற்காலத்தில் இப்பகுதியில்தான் அதிகமாகத் திரையரங்குகளும், பத்திரிகை அலுவலகங்களும் அமைந்தன. ஆனால், அதற்கு முன்னரே கோட்டைக்கு வடக்குப் பகுதியில் ஆங்கிலேயர் வந்திறங்கிய காலந்தொட்டே உள்ளூர் மக்களும் நெசவாளர்களும் அதிகம் குடிபுகத் தொடங்கினர். கருப்பர் நகரம் என ஆங்கிலேயர்களால் அழைக்கப்பட்ட பகுதியிலே கணக்குப்பிள்ளை, அதிகாரி, பெத்த நாயக்கன் என்ற காவல் பணி செய்பவர் ஆகியோர் நிர்வாகம் நடத்தி வந்தனர். இப்பகுதி பின்னர் வெகுவேகமாக வளர்ந்தது. பெத்தநாயக்கன்பேட்டை, முத்தியால்பேட்டை ஆங்கிலேயர்களின் கடைகள் அதிகம் அமைந்த பிராட்வே ஆகியவை இப்போது அப்பகுதியில் அமைந்துள்ளன. கடற்கரையோரப் பகுதியில் 19–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே பாரி நிறுவனம் செயல்படத் தொடங்கியது.

### சென்னை உயர்நீதிமன்றம்

இதன் அருகில் 1892–இல் சென்னை உயர் நீதிமன்றக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. முதலில் 1678–இல் ஆளுநர் தலைமை வகித்த மேல்முறையீட்டு நீதிமன்றம் அமைக்கப்பட்டதை யடுத்து, படிப்படியாக அட்மிரால்டி நீதிமன்றம், மேயரின் நீதிமன்றம், சிறு வழக்குகள் நீதிமன்றம் என்று சென்னை நகரில் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. 19–ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் செயல்படத் தொடங்கிய சென்னை உச்ச நீதிமன்றம் ( Supreme court of Madras) சுமார் 20 ஆண்டுகளுக்கு இப்போதுள்ள சென்னை மாவட்ட ஆட்சியரகம் உள்ள இடத்திலமைந்த பெண்டிங் கட்டடத்தில் செயல்பட்டது. 1857இல் நிகழ்ந்த இந்திய விடுதலைக்கான முதல் போருக்குப் பிறகு 1862–இல் சென்னை உயர் நீதிமன்றம் (Madras High Court) என்ற அமைப்பு நிறுவப்பட்டு, அதன் முதல் இந்திய நீதிபதியாக சர். முத்துசாமி அய்யர் நியமிக்கப்பட்டார். இந்தியா முழுவதற்கும் வழிகாட்டிய இந்நீதிமன்றத்தில்

அமைந்த கோபுரத்தின் உச்சியில் கப்பல்களுக்கு வழிகாட்டிய கலங்கரை விளக்கமும் பல்லாண்டுகள் இயங்கி வந்தது.

### கடன் கொடுத்து இடங்களைக் கவர்ந்த ஆங்கிலேயர்

கோட்டைக்குத் தெற்கே சேப்பாக்கம் உள்ள பகுதியில் சென்னை நகரின் பல அழகிய கட்டடங்கள் கடற்கரையை அலங்கரிக்கின்றன. விஜயநகர அரசின் வீழ்ச்சிக்குப் பிறகு கோல்கொண்டா சுல்தானின் கீழும், பின்னர் மொகலாய அரசர் ஔரங்கசீப் ஆட்சியின் கீழும் தமிழ் நாட்டின் பல பகுதிகள் வந்தன. அதன்பின் கர்நாடகப் போரில் ஆங்கிலேயர் ஆதரித்த அணி வெற்றி பெற்றவுடன் கர்நாடக நவாப்பிற்கு இவை சொந்தமாயின. ஆங்கிலேயப் பொறியாளரான பென்ஃபீல்ட் என்பவர் நவாப்பிற்கு நிறைய கடன் கொடுத்து, கடனாளியாக்கியதன் விளைவாக அக்கடனைத் தான் அடைப்பதாகக் கூறி, ஆங்கிலேய அரசு பெரும்பாலான சொத்துகளைப் பறித்துக்கொண்டது.

### மாநிலக் கல்லூரி – இராஜாஜி மண்டபம்

முதலில் எழும்பூரில் ஆரம்பப் பள்ளியாகச் செயல்பட்டுப் பின்னர் சென்னையின் புகழ் பெற்ற கல்லூரியாக விளங்கும் மாநிலக் கல்லூரி 1870–இல் கட்டிமுடிக்கப்பட்டது. இதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்பே தோன்றிய உலகப் புகழ் பெற்ற சென்னைப் பல்கலைக்கழகம் இக்கல்லூரியை ஒட்டி அமைந்து வளர்ந்து விரிவடைந்தது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் செனட் இல்லம் சிஸோம் என்பவரால் வடிவமைக்கப்பட்டு 1879–இல் கட்டி முடிக்கப்பட்டது. இம்மண்டபத்திலேயே 14.7.1937 அன்று சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டம் நடைபெற்றது. இதை யொட்டியுள்ள அரசினர் தோட்டத்தில்தான் ராபர்ட் கிளைவின் மகனான ஆளுநர் எட்வர்ட் கிளைவ் தம் தந்தை நினைவாக 1802–ல் கட்டிய விருந்து மண்டபம் (Banquetting Hall) உள்ளது. இது தற்போது இராஜாஜி மண்டபம் என அழைக்கப்படுகிறது. இம்மண்டபத்தில் 1910–1911–லும் மீண்டும் 1937–1939–லும் சட்டமன்றக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

### சென்னை – ஆற்காடு இரயில் போக்குவரத்து

சென்னையிலிருந்து ஆற்காட்டிற்கு விடப்பட்ட இரயில் வண்டியின் மூலம் 1.7.1856–இல் சென்னையில் இரயில் போக்குவரத்து முதன் முதலில் தொடங்கியது. முதலில் இராயபுரத்திலேயே பல இரயில்கள் தொடங்கின.

இன்றும் அப்பகுதிகளில் பல பழைய இரயில்வே கிடங்குகளைக் காணலாம். அதன் பின்னரே சென்டிரல் நிலையம் சிறிதாக அமைக்கப்பட்டு தொடர்ந்து இப்போதுள்ள கட்டடம் 1900–இல் கட்டி முடிக்கப்பட்டது. தற்போதைய தென்னக இரயில்வேயின் தலைமையகம் முன்னர் மதராஸ் மற்றும் தென்னக மராட்டா இரயில்வே கம்பெனியின் தலைமையிடமாக இருந்தது.

### டிராம் வண்டியும் பேருந்து போக்குவரத்தும்

இந்தியாவில் முதன்முதலில் சென்னையில் டிராம் வண்டிப் போக்குவரத்து 1895–இல் தொடங்கியது. பின்னர் 1950–களில் பல்வேறு பிரச்சினைகளால் இது நிறுத்தப்பட்டது. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தே சென்னையில் பஸ் போக்குவரத்து தனியாரால் நடத்தப் பெற்றது. இருப்பினும் சிறந்த அமைப்பு முறையுடன் இது பரவலானது 1925–க்குப் பிறகுதான். அந்நிலையில் இருந்து வளர்ந்து 1972–இல் அரசுப் போக்குவரத்துக் கழகமாக மாறி இப்போது சென்னை நகரின் அனைத்து மூலைகளுக்கும் கூட அரசுப் பேருந்துகள் செல்லும் நிலைக்கு வளர்ந்து 1997 ஆகஸ்டு திங்களில் வெள்ளிவிழா கொண்டாடும் நிறுவனமாக வளர்ந்தது.

### அரசுப் பொது மருத்துவமனை

முதலில் 1664–இல் கோட்டையில் தொடங்கப்பட்ட மருத்துவமனை பின்னர் பல இடங்களுக்கு மாறி 18–ஆம் நூற்றாண்டின் இடையில் தற்போது உள்ள அரசுப் பொது மருத்துவமனை அமைந்துள்ள இடத்திற்கு வந்தது. அது 1890 முதல்தான் பொது மக்களுக்கு முழுமையாகப் பயன்படும் அரசு மருத்துவமனையாகச் செயல்படத் தொடங்கியது.

### ரிப்பன் மாளிகை

தற்போதைய ஈ.வெ.ரா, சாலையின் தொடக்கத்தில் சென்டிரல் நிலையம் தவிர, மூர் அங்காடி இருந்த இடத்தில் பெரிய பொதுமக்கள் பூங்கா ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. அதன் அருகில் விக்டோரியா மண்டபமும், 1913–இல் திறக்கப்பட்ட ரிப்பன் கட்டடமும் அழகு செய்கின்றன.

### சென்னைத் துறைமுகம்

சென்னை நகருக்கு மிக முக்கியமாக விளங்குவது அதன் துறைமுகம் ஆகும். 1770 முதலே பல்வேறு காலகட்டங்களில் படகுகளும், கப்பல்களும் சரக்குகளை ஏற்றி இறக்கவும் ஒரு துறைமுகத்தை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் இயற்கைச்சீற்றங்களால் ஒரு நிலைத்த துறைமுகத்தை அமைக்க முடியவில்லை. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் அத்தகைய ஓர் அமைப்பு ஏற்பட்டு 1905–இல் சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகம் அமைந்தது.

### அச்சகங்கள்

சென்னை நகரில்தான் முதன் முதலில் சிறந்த அச்சகம் அமைந்தது 1761இல் கிறிஸ்துவ படைப்புகளை அச்சடிக்கும் டையோசீஸ் அச்சகமே அந்தப் பெருமையைப் பெற்றதாகும். பின்னர் கோட்டையில் காலேஜ் பிரஸ், மாலே அசைலம் பிரஸ் ஆகியவை தோன்றின. அசைலம் பிரஸ் அக்காலத்தில் ஆண்டுதோறும் வெளியிட்டு வந்த சென்னை மாகாணத்தின் அனைத்து விவரங்கள் அடங்கிய தகவல் தொகுப்பு ( Madras Almanac and Directory ) மிக அரிய தகவல்கள் அடங்கிய சிறந்த வெளியீடாக அமைந்தது. 1831–இல் அரசு அச்சகம் கோட்டையில் அமைக்கப்பட்டு 19–ஆம் நூற்றாண்டின் இறுதியில், அதாவது 1888–இல் தற்போதுள்ள இடத்திற்கு மாறியது. அதன் பிறகு பல்வேறு அச்சகங்கள் சென்னையில் வளர்ந்து வந்துள்ளன.

### பத்திரிகைகள்

அச்சகங்கள் வந்ததைத் தொடர்ந்து பத்திரிகைகளும் வளர ஆரம்பித்தன. 1785 முதலே ஆங்கிலப் பத்திரிகைகள் சில இருந்துவந்தாலும், மதராஸ் டைம்ஸ், பின்னர் மதராஸ் மெயில் ஆகியவை புகழ் பெற்று விளங்கியவையாகும். அக்காலத்திலேயே உள்ளூர்ப் பத்திரிகைகளும் மெல்ல வளர்ந்தன. 1844–லேயே திரு.லட்சுமிநரசு செட்டி என்பவர் ‘தி கிரசெண்ட்’ என்ற பத்திரிகையைத் தொடங்கி இந்தியர்களின் அரசியல் கருத்துகளை எதிரொலிக்கும் ஒரு கருவியாகப் பயன்படுத்தினார். 1878–இல் இந்து பத்திரிகை தொடங்கப்பட்ட பின்னர் டெய்லி எக்ஸ்பிரஸ், இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகியவை தொடங்கி வளர்ந்தன. 1855–இல் தினவர்த்தமணியும் அதன் பின்னர் பல்வேறு தமிழ் நாளேடுகளும் தொடங்கப்பட்டாலும், 1882–இல் ஆரம்பிக்கப்பட்ட சுதேசமித்ரன் அக்காலத்து அரசியல் சூழலுக்கு ஏற்ப நாட்டுப்பற்றை ஊட்டக்கூடிய ஏடாக அமைந்தது. பிறகு, ஸ்வராஜ்ஜியா, தமிழ் நாடு, தினமணி, தினத்தந்தி, தினமலர், முரசொலி, தினகரன் எனப் பல்வேறு பத்திரிகைகள் வளர்ந்துள்ளன.









## அருங்காட்சியகம்

சென்னை பாந்தியன் சாலையில் உள்ள அருங்காட்சியகம், முதலில் ஆளுநர்கள் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் இடமாக இருந்தது. 1851–லிருந்து அருங்காட்சியகமாகச் செயல்படத் தொடங்கி சிறந்த வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்கிறது.




## கன்னிமாரா நூலகம்

ஆங்கிலேயர் வந்த உடனே கோட்டையில் நூலகம் தொடங்கப்பட்டாலும் பெரிய அளவில் நூலகம் அமைந்தது 1861–இல்தான். இங்கிலாந்திலிருந்து பல்வேறு பொருள்கள் பற்றிய புத்தகங்களும் கொணரப்பட்டு பின்னர் 1896–இல் கன்னிமாரா நூலகம் தொடங்கப்பட்டது. இது இந்திய தேசிய நூலகங்களில் ஒன்றாக விளங்குகிறது.

## ஆவணக் காப்பகம்

பழைய ஏடுகளையும், புத்தகங்களையும், படைப்புகளையும் பாதுகாக்கும் ஆவணக் காப்பகம் என்ற அமைப்பு சென்னையில் 1909 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. எனினும், 1810 ஆம் ஆண்டுக்கு முன்னரே ஓர் ஆவண அலுவலகம் கோட்டையில் செயல்பட்டு வந்துள்ளது.



## விரிவடைந்த சென்னை மாநகரம்

இவ்வாறு சிறந்த அமைப்புகளைத் தன்னகத்தே பெற்று வளர்ந்து வந்த சென்னை நகரம் 1923 முதல் 1950 வரை தியாகராய நகர், அடையாறு, சைதாப்பேட்டை, கோடம்பாக்கம் போன்ற பகுதிகளையும் உள்ளடக்கி விரிந்தது. பிறகு அண்ணா நகர், கே.கே. நகர் எனத் தொடங்கி தற்போது பெருமளவில் வளர்ந்து பெருநகரமாக மாறி வருகிறது. முதலிலிருந்தே மாகாணத்தின் தலைநகராக விளங்கிய சென்னை, மொழிவாரி மாநிலங்கள் அமைப்புக்குப் பின்னரும் தமிழ்நாட்டின் தலைநகராகத் தொடர்ந்து மிளிர்ந்து வருகிறது. முதலில் "மதராஸ்" என அழைக்கப்பட்ட இந்நகரம் 31–8–1996 அன்று சட்டமன்றப் பேரவை நிறைவேற்றிய சட்டத்தையடுத்து அனைத்து மொழிகளிலும் 'சென்னை' என்றே அழைக்கப்படுகிறது.



# கொடிக் கம்பம் சொல்லும் கதை

சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள கொடிக் கம்பம் பல சிறப்பான வரலாறுகளைக் கொண்டுள்ளது. 1687 ஆம் ஆண்டில் ஆளுநராக இருந்தவர் திரு.யேல். அவர் காலத்தில் தான் இக்கொடிக் கம்பம் நிறுவப்பட்டது. தரைதட்டி உடைந்த ‘‘லாயல் அட்வெஞ்சர்’’ என்ற கப்பலில் இருந்த தேக்கு மரத்தாலான கம்பம் எடுக்கப்பட்டு; கோட்டைக் கொத்தளத்தில் கொடி மரமாக நிறுவப்பட்டது. 150 அடி உயரம் கொண்ட இக்கொடிக் கம்பம்தான் இந்தியாவிலேயே மிகவும் உயரமானதாகும்.

ஆளுநர் திரு.யேல் இங்கிலாந்து நாட்டின் செயின்ட் ஜார்ஜ் கிராஸ் வடிவத்துடன் கூடிய கொடியை இந்தக் கம்பத்தில் முதன்முறையாக 1687 ஆம் ஆண்டில் ஏற்றினார்.

1947–இல் இந்தியா சுதந்திரம் அடைந்தபோது இதில் மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டது. இந்தக் கொடிக் கம்பம் பல அரிய செய்திகளைத் தாங்கி உள்ளது. இந்தக் கொடிக் கம்பத்தில் மாநில முதலமைச்சரே தேசியக் கொடியை ஏற்றி வைக்கலாமென உரிமை பெற்றதும் ஒரு தனி வரலாறாகும். அது:

புதுடெல்லியில் சுதந்திரத் திருநாளில் பிரதமர் தேசியக் கொடியேற்றுவதும், குடியரசு நாளில் குடியரசுத் தலைவர் கொடியேற்றுவதும் வழக்கம். இதைச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாநிலங்களில் சுதந்திர தினம், குடியரசு தினம் இரண்டிலும் மாநில ஆளுநரே கொடியை ஏற்றி வைக்கிறார்கள்; இந்த முறையை மாற்றி, சுதந்திரத் திருநாளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர்களே மாநிலங்களில் தேசியக் கொடியை ஏற்றிவைத்திட உரிமை வழங்கப்பட வேண்டுமென பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் நேரிலும், கடிதங்கள் வாயிலாகவும் பலமுறை கோரிக்கைகள் அளித்தார்கள். முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அந்தக் கோரிக்கை பிரதமர் இந்திராகாந்தி அவர்களால் ஏற்கப்பட்டு மாநிலங்களில் முதலமைச்சர்களே சுதந்திரத் திருநாளில் தேசியக் கொடியேற்றும் உரிமை வழங்கப்பட்டது.

அதன்படி, ஆண்டுதோறும் சுதந்திரத் திருநாளில் சென்னை புனித ஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில் தமிழக ஆளுநரே கொடி ஏற்றும் வழக்கம் மாறியது. மாநில முதலமைச்சர் என்ற முறையில் முதன்முதலாக 15.8.1974 அன்று கோட்டைக் கொத்தளத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்கள். இதன் மூலம் கோட்டைக் கொடிக் கம்பத்தோடு இணைந்த ஒரு புதிய வரலாறு தொடங்கியது. முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கோரிக்கை காரணமாகத் தமிழகத்தில் மட்டுமல்லாமல் இந்திய மாநிலங்கள் அனைத்திலும் அந்தந்த மாநிலங்களின் முதலமைச்சர்களே சுதந்திரத் திருநாளில் தேசியக் கொடியை ஏற்றிவைத்திட உரிமை பெற்றார்கள் என்பதும், அவர்கள் அனைவரும் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பாராட்டினார்கள் என்பதும் கலைஞர் அவர்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகப் போற்றப்படுகிறது.

### ஆர்யா என்ற பாஷ்யம் செய்த புரட்சி

இவர், தஞ்சை மாவட்டம் மன்னார்குடி அருகில் உள்ள சேரன்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர். சுதந்திரப் போராட்ட காலத்தில் நீடாமங்கலம் வந்த அண்ணல் காந்தியடிகளின் உரை கேட்டு, ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரமாகப் பங்குகொண்டு முதலில் பள்ளிப் படிப்பைக் கைவிட்டார். தந்தையார் கெஞ்சிக்கெஞ்சிக் கேட்டுக் கொண்டதால் படிப்பைத் தொடர்ந்தார். திருச்சி தேசியக் கல்லூரி மாணவராக விளங்கியபோது 1928 அக்டோபரில் திருச்சிக்கு வருகை தந்த சைமன் குழுவை எதிர்த்து நடைபெற்ற ஊர்வலத்தில் ஆர்யா பங்கேற்றார். அதற்காகக் கல்லூரி முதல்வர் அவருக்கு விதித்த அபராதத்தைக் கட்ட மறுத்துக் கல்லூரிப் படிப்பையே கைவிட்டார்.

1931இல் லண்டனில் நடைபெற்ற வட்ட மேசை மாநாடு தோல்வியில் முடிந்தது. மும்பை திரும்பிய காந்தியடிகள் அங்கேயே கைது செய்யப்பட்டார். நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்தன. உடனே, ஜவஹர்லால் நேரு அவர்கள் ஜனவரி 26ஆம் தேதியை நாட்டு மக்கள் சுதந்திர தினமாகக் கொண்டாடுமாறு அறிக்கை விடுத்தார். அந்த அறிக்கையால் ஈர்க்கப்பட்ட பாஷ்யம் 25.1.1932 அன்று இரவு தேசியக்கொடியை இடுப்பில் சுற்றிக் கொண்டு கோட்டைக் கொடிக் கம்பத்தில் ஆங்கிலேய பாதுகாப்பு அதிகாரிகள் யாரும் அறியாமல் ஏறினார். அங்கு பறந்து கொண்டிருந்த பிரிட்டிஷ் கொடியை அகற்றி; தேசியக் கொடியைக் கட்டிப் பறக்க விட்டுவிட்டுக் கீழே இறங்கித் தப்பினார். மறுநாள் காலை கோட்டைக் கொடிமரத்தில் பறந்த தேசியக் கொடியைக் கண்டு ஆங்கிலேய அதிகாரிகள் அதிர்ந்தனர்; சென்னை மாநகர மக்கள் மகிழ்ந்தனர்.

அந்தத் தீரச் செயல் புரிந்த வீரர் ஆர்யா என்ற பாஷ்யம் அவர்களின் தியாகச் செயலைப் போற்றி கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் 17.7.1999 அன்று முதலமைச்சர் கலைஞர் அவருக்குச் சிலை எடுத்துச் சிறப்பித்தார். சென்னையில் கோட்டைக் கொடிமரத்தைப் பார்க்கும்போது பாஷ்யம் அவர்களின் வீரச் செயலும், அவரின் புகழும், பெருமையும் நம் நினைவிற்கு வரும்!

தேக்கு மரத்தினாலான இக்கொடிக் கம்பம் பழுதடைந்ததால் 1994 ஆம் ஆண்டில் எஃகினாலான புதிய கொடிக் கம்பம் நிறுவப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.



GOVERNMENT OF KERALA

**Pinarayi Vijayan**

CHIEF MINISTER

03 August, 2021.

## MESSAGE

Thank you for your letter regarding the centenary celebrations of the Tamil Nadu Legislature. However, I received it only after the celebrations were over.

As you know, the erstwhile Malabar District which was part of the Madras Presidency under British India, is now part of Kerala. Therefore, the TN Legislature's centenary is a momentous occasion for us too, especially for Northern Kerala. I am sure that all the activities planned as part of its celebrations - including the unveiling of Kalaignar Karunanidhi's portrait and the release of the souvenir - went well and were a grand success.

Please accept Kerala State's as well as my personal greetings on the centenary celebrations, of the Tamil Nadu Legislature.

Yours sincerely,

Pinarayi Vijayan





## ஆளுநர் வெலிங்டன்
## சென்னை சட்டமன்றத் தொடக்க விழாவில் தலைமையேற்றவர்

# The Lord Willingdon,
## Governor of Madras request
# The Duke of Connaught
## to Inaugurate The Council - 12-1-1921

His Excellency The Governor Of Madras, Lord Willingdon, in requesting His Royal Highness the Duke of Connaught to inaugurate the Madras Legislative Council, said:-

"May it please Your Royal Highness, - It is my privilege, on behalf of the Government and of the people of the Madras Presidency and their elected representatives assembled in this Council Chamber, to offer to Your Royal Highness a most cordial and respectful welcome to this the senior Province in India and to assure you that it is to us a matter of very special gratification that Your Royal Highness landing on the shores of India on this memorable occasion should have taken place at our capital city. Fort St. George, under the ramparts of which this Council Chamber lies, marked the first establishment of the British Empire in India, and it is indeed appropriate that the same spot should now, nearly three hundred years later, witness an event no less momentous to the destiny of India and fraught, as we trust, with no less benefit to its peoples.

We in Madras share with the rest of India in the disappointment caused by the postponement of the visit of His Royal Highness the Prince of



**கன்னாட் கோமகன்**
**சென்னை சட்டமன்றத்தை 12.1.1921 அன்று**
**தொடங்கி வைத்த பிரிட்டிஷ் இளவரசர்**

Wales, whom, we trust, we may have the privilege of welcoming to this country before long, but we rejoice that his place as the representative of His Majesty the King Emperor on the occasion of the inauguration of our new constitution has been taken by Your Royal Highness of whose personal services to this country in the past we have a lively recollection, and whose acquaintance with the problems of Indian Government ensures on the part of Your Royal Highness a special measure of understanding and sympathy.

Your Royal Highness' presence in this Chamber as the respresentative of His Imperial Majesty once more bears testimony to the deep affection and concern for the interests of India and its people which have always been evinced by His Majesty of and indeed by all the members of the Royal family. We in the Madras Presidency of whatever race and creed, desire humbly to reciprocate that affection and beg your Royal Highness to convey to his imperial majesty an assurance of the deep loyalty and devotion which now as heretofore we bear to His Throne and Person.

The new constitution which Your Royal Highness is about to inaugurate admits the elected representatives of the people of India for the first time to share in the Government of the country, and we recognize in it the foundation upon which will be raised in the years to come the completed edifice of our constitutional freedom, as a full partner in the fortunes of the British Empire. We pray that under God's providence the labours of this, the first popularly elected Assembly to be constituted in India, may, with the full co-operation of all classes and creeds of His Majesty's subjects, lead ever more and more to the prosperity and development of our Presidency, to the peace, contentment, and happiness of its people, and to the strengthening of the bonds which bind us to the British Empire.

## Inaugural Speech Of His Royal Highness The Duke Of Connaught

Your Excellency, Mr. President and Members of the Madras Legislative Council By the command of His Majesty the King Emperor, I have come to India to inaugurate on his behalf the new constitution of which in Madras this Council is an integral part, and to bring his affectionate greetings to his Indian people. My presence here today is a token of His Majesty's lively interest in this great movement of orderly progress towards constitutional liberty, and of his wishes for its success. Your welcome to me as the King Emperor's delegate is a fitting response to his message of goodwill. It will be my pleasing duty to convey it to His Majesty, and to lay before him your assurances of loyalty and devotion to His Throne and Person.

Your Excellency and gentlemen - I thank you for your welcome to me personally, and your reference to my previous association with India. Years have passed-years of rapid change-since I served in this country, but my memories of it are vivid and happy. I still have many friends among its people, and I deeply rejoice to visit it again.

It is a source of special pleasure to me to meet here as your Governor my friend Lord Willingdon. To the zealous discharge of his office he has brought those remarkable gifts of charm and personality which have everywhere gained him respect and affection. In Lord Willingdon you have a man who represents the best that England has to give you, the finest type of an English gentleman.

No place in India could more appropriately have been selected for entering upon the important duty with which His Majesty has entrusted me. It was here that the connexion between India and the British Empire was first definitely established. It was in Fort St. George that Clive began the career during which, aided largely by the courage and tenacity of Madras troops, he secured a footing for the British power. It was here, nearly a hundred years ago, that Sir Thomas Munro as Governor of this Province, first defined, in a despatch to the Court of Directors, the true policy and the only vindication of the British connexion - that the people of India should be taught, and guided, and fitted to govern themselves.

At last that policy is ripening into fruition. In this historic Presidency it will be the task of Your Excellency and your officers, of you the Members of the Legislative Council, and of the Ministers who will be drawn from among you, to cherish its growth and to hand it on to your successors, a stage further towards perfect maturity. In that task I have come to wish you godspeed on behalf of your Sovereign and the sister nations of our Empire.

In India, as elsewhere, political development is only a vehicle for human life and human progress. Its function is to provide a nation with means for increasing the happiness of the people. The form has an importance of its own; but the spirit is vital; for liberty, unless human brotherhood follows in its steps, may easily become a greater tyranny. With those, therefore, who would share in the building-up of your newconstitution, the thought of the people's happiness must ever be paramount and I can imagine how, at this epoch in your history, your minds are turning towards that high ideal. The pursuit of it demands of you many qualities - patience, insight, sympathy and the like - but if I were to try to enumerate them, I should conclude in the well-known words that 'the greatest of these is charity'. I mean not only courtesy between political opponents and tolerance of antagonistic views, though those virtues will be needed to sweeten your labours. I am thinking rather of that wider toleration, which blunts the sharpness of conflicting interests. It is this form of charity which must surely be the underlying principle and the aim of your political growth. India has suffered much in the past from the clash of religions. She has suffered from hard distinctions between social orders. These mean disunion, and disunion is weakness. They mean constraint, and constraint is unhappiness. To mitigate these in the future will be your statesmanship.

I cannot pretend to speak to you on the local topics which will immediately engage the attention of your Council and your Ministers. I am not sufficiently familiar with them. But as one who has for many years watched the unfolding of political freedom in other lands, and still more as a true friend of India, I may venture to offer to you, and to the other Councils which I shall meet elsewhere, a few words of general application to the great work which lies before you.

Let the first of these be the plea which I have just put before you. It is a plea that you should sink differences and magnify points of concord. Thus united, use your new political machinery to raise

the depressed and to lower the walls between creeds and castes and hostile interests. The task will be far from easy, but I am confident that you will not shrink from it. I now declare the new Legislative Council for the Madras Presidency established under the Government of India Act, 1919, to be duly open, and I join with Your Excellency and with all those who love India in a heartfelt prayer for the Almighty's guidance in your labours".

## Speech Of The Lord Willingdon, Governor Of Madras Presentation of The Presidential Chair 6-3-1922

Their Excellencies the Governor and Lady Willingdon arrived at the Council Chamber at 11-05 a.m. and took their seats on either side of the President. His Excellency, before presenting the Presidential chair, addressed the Council in the following terms:

"Mr. President and honourable members of the Madras Legislative Council:-

I need hardly say to you that it is a very great pleasure and privilege to Her Excellency and myself to come here and attend this, to my mind, interesting ceremony and to hand over as a personal gift from herself and myself to you, Sir, as the custodian of all affairs connected with this Legislative Council, this President's Chair (Cheers). I think I may claim, Sir, that both she and I - perhaps I in rather a greater degree than she - have some hereditary right to present this chair to any legislative council; for, as you are all aware, she claims for her father a gentleman, a great imperial citizen, who lived long years doing parliamentary work in both Houses of Parliament and held high offices in the State and in His Majesty's Cabinet (Cheers). I think my claim is still greater, for I can call to my mind in my youth the time when my grandfather, Speaker Brand, was Speaker of the House of Commons and therefore I can truly say I was brought up under the shadow of the Speaker's chair (Cheers). Now, Sir, this ceremony calls certain interesting things to my mind and very particularly the fact that I have had the honour and privilege which I think few Governors have had of presiding over legislative councils for seven years during my life in India, and I have had practical Opportunities of witnessing, and of interesting myself in, all the advances of those legislative councils during those years. I can recollect the time - and I think the honourable members who are sitting here will probably recollect the time too - when it was not unusual for an honourable member to circulate a printed document to both the President and every honourable member of the House and then come down to the House and read out that pretty document to honourable members. Now it is unusual, indeed, I think it is rather infrequent, for honourable members to bring down a carefully typewritten document and read it with due solemnity to honourable members of the House. Now, Sir, I realize the enormous advance that has been made in that matter in legislative councils when I sit up in that gallery (pointing to the Governor's box), for find that all your proceedings are carried out with all the customs and habits of parliamentary procedure in the House of Commons. Now, Sir, with that recollection in my mind, may I not say that I have the full belief that this gift of ours may be to you a further stepping-stone to reach that final goal that is promised to you under the reforms (Cheers ), that this chair may be casting a shadow of the events which may be coming to you before many years are over? (Cheers) Mr. President, it is my most sincere hope that all who succeed you and sit in that chair may uphold in the highest degree the dignity and prestige of the Madras Legislative Council (Cheers), and I trust that they will always conduct the affairs with that decision, good judgement and tact which have so eminently characterized your conduct of affairs since you have held the President's chair (Cheers). May I make one personal observation on behalf of my wife and myself before I conclude these few remarks? It is this. It is our sincere hope that in future years the honourable members present and those who succeed them may call to mind, by the fact of this gift of the President's chair, the memory of two people who, great as their mistakes might have been, and many as their faults might have been, have tried honestly, sincerely and devotedly to help forward the progress, prosperity and welfare of your country." (Cheers).

The Hon'ble Sir Lionel Davidson: "Mr. President, few words are needed from me, Sir, to commend to this House the resolution which I have



ஆளுநர் வெலிங்டன்
வழங்கிய பேரவைத்
தலைவர் இருக்கை

the honour to move. It runs in these terms: That the respectful thanks of this House be given to Their Excellencies the Governor and Lady Willingdon for their kindly and appropriate gift of a President's chair. (Cheers). His Excellency has told us, Sir, why "the gift is appropriate, though it was not within His Excellency's knowledge that the terms of my resolution would contain that word. We must all recognize that it has been a singularly felicitous thought on the part of Their Excellencies to bestow this chair on the House, and we all realize, Sir, how eminently fit you are to occupy it. It only remains for me to echo what is, I am confident, the thought of every one in this House, namely, that Their Excellencies have indeed been sincere and true friends of the progress of India and that His Excellency in particular has spared no pains to advance the future of this country (Cheers). I will now, Sir, repeat the terms of my resolution, viz., - that the respectful thanks of this House be given to Their Excellencies the Governor and Lady Willingdon for their kindly and appropriate gift of a President's chair." (Cheers).

Diwan Bahadur M.Ramachandra Rao Pantulu: "Mr.President, I beg to second this motion and in doing so I associate myself fully with the observations made by the Hon'ble Sir Lionel Davidson. In announcing, this gift, sometime last year, His Excellency made the observation that you, Sir, would be able to call remembers to order with even greater dignity than you have hitherto brought to the discharge of your high office. Those words of His Excellency peculiarly appropriate and I join with my Hon'ble friend Sir Lionel Davidson in the remarks that he has made in regard to yourself as President of this House. Sir, I sincerely trust and I join with His Excellency in the hope that the precedents and conventions established by you and your successors will contribute to the smooth and harmonious working of the parliamentary system that has been inaugurated last year."

"I also join with His Excellency in the hope, and I am sure every hounourable member of this house has the same thought at the present moment of the early realization of full responsible government and the establishment of full self-government in India, to which His Excellency has referred. Sir, we are aware that His Excellency has taken a good deal of interest in the working of the Reforms, and I believe that this gift of Their Excellencies is a further proof of their solicitude for the establishment of parliamentary forms and methods and for the development of the system of parliamentary government that has been brought into operation. We are deeply grateful to Their Excellencies for this gift. I have only one word more. I see in the books that the Speakers of the House of Commons used to take away the arm chair used by them as Presidents of the assembly as a memento of their tenure of office (laughter). I may, however, inform the Council that there was a break in the practice since 1832. That is a relief, and I trust. Sir, that this chair which is the gift of Their Excellencies will go down to future generations as a historic relic presented to the Council at the beginning of the new era. With these words, I beg to second the motion.

"The Hon'ble the President (Thiru P.Rajagopala Achariyar) :- "Before putting the motion to the House I should like, with the leave of honourable members, to express to Their Excellencies my personal acknowledgement of their gift and also how greatly I appreciate His Excellency's kind reference and also the very kind reference by the Leader of the House as well as by the honourable member Mr. Ramachandra Rao to the way in which I have discharged my duties as President. I should only like to add one word, viz., that any little success that I may have attained in that direction is due entirely to the heartly and cordial co-operation that I have had from all sections of the House. I do not think any President, however capable, can really manage an assembly like this unless he commands the respect and confidence-l would even say the affectionate respect and confidence - of the members. And I for my part would like to take this opportunity to acknowledge most heartily, and to say how greatly I appreciate, the cordial terms which have subsisted between the House and its President. As regards those who may come after me, I can have no higher wish for them than that they should in their time find themselves presiding over assemblies as good as the one over which it is my privilege to preside now. With these words, I will now put the motion to the House."

The motion was put and carried amidst enthusiastic applause.

# மாப்பிள்ளையும் மாப்பிள்ளை தோழனும்!

**பேரறிஞர் அண்ணா**
**மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்**

**சட்டமன்றத்தில் 30–4–1957 அன்று ஆற்றிய முதல் உரை !**

“சடமன்றத் தலைவர் அவர்களே, துணைத் தலைவர் அவர்களே, தங்களுடைய கட்டளைக்கு அடங்கி நல்ல முறையில் தங்களுடன் ஒத்துழைத்து இந்தச் சபையின் கண்ணியத்தைக் காப்பாற்றுவதில் இந்தப் பகுதியில் அமர்ந்திருக்கிற எங்களுக்கு உண்மையில் நல்ல நம்பிக்கையும், இதிலே பிறருக்கு நம்பிக்கை ஏற்படச் செய்ய வேண்டுமென்ற உறுதிப்பாடும் இருப்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களுடைய சிறந்த அறிவாற்றலை நான், மாணவனாய் இருந்த பருவத்திலும் அரசியல் நடவடிக்கைகளைக் கவனித்துப் பார்த்த காலத்திலுமிருந்தே நன்கு அறிந்திருக்கிறேன். தங்களைப்போன்ற நேர்மை உள்ளம் படைத்தவர்கள் போட்டியின்றியே சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதுதான் பொருத்தமானது என்றாலும், ஜனநாயக அமைப்பிலே சிலபல தவிர்க்கமுடியாத கடமைகளுக்கு உட்பட்டுப் போட்டி இருந்தது என்பதையும், அந்தப் போட்டியும் தங்கள் புகழை அதிகப்படுத்துவதாக முடிந்தது என்பதையும் அறிவோம்.

பாராளுமன்ற நடவடிக்கைகளில் தங்களுடைய அறிவையும், ஆற்றலையும் நன்கு அறிந்திருக்கக்கூடிய எங்களுக்கு அதிலே அதிகமான அனுபவம் இல்லாததைத் தாங்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். அரசியல் துறையில் தாங்கள் நல்ல அறிவாற்றல் பெற்றிருப்பதுபோலவே தாங்கள் ஈடுபட்டிருக்கிற மருத்துவத் துறையில் யார் யார் தங்களிடம் இளைத்து வருகிறார்களோ, அவர்களுக்குப் பலமூட்டுகின்ற காரியத்தில் நீண்ட நாளாக ஈடுபட்டிருக்கிறீர்கள். உடல் இளைத்தோருக்கு மருத்துவராக அவர்கள் பக்கத்தில் நின்று தாங்கள் பலமூட்டுவதைப் போலவே, அரசியலில் இளைத்தோருக்குப் பக்கத்திலும் தாங்கள் நின்று பலமூட்ட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் உலகத்தில், நம் நாட்டு ஜனநாயக ஆட்சியில் என்போன்றவர்களுக்கு இத்தகைய சட்டமன்றத்தில் அனுபவம் இல்லாதது மட்டுமல்ல; பொதுவாக பிற ஜனநாயக நாடுகளோடு ஜனநாயக முறையில் செயல்படுகிற நம்முடைய நாட்டை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது சிறு குழந்தைப் பருவத்தில்தான் உள்ளது என்பதை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம். இந்த நிலையில் நல்ல ஜனநாயகப் பண்புடன் வளர்ந்திருக்கும் தாங்கள், இந்தப் பக்கத்திலுள்ள சிலர் யாராவது சில சமயங்களில்





கொஞ்சம் குறும்பாக, குழந்தைத்தனமாக நடந்து கொண்டால் தாய் போன்று எங்களை அன்புடன் அணைத்து, அதிகமாக அடிக்காமல், கருணையோடு சீராட்டி வளர்ப்பீர்கள் என்று உறுதியாக நம்புகின்றேன்.

நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் அரசியல் அனுபவம் உள்ளவர்கள், அரசியல் அனுபவம் இல்லாதவர்கள் என்ற இரண்டு வகை மட்டுமல்ல ; இதையே வேறுவகையில் சொன்னால் ஞானவான்கள், அஞ்ஞானம் நிரம்பியவர்கள் என்ற இரண்டு வகை மட்டும் அல்ல, ஞான சூன்யர்கள் இருப்பதாகவும் கருதப்பட்டு வருகிறது. எங்களைப் போன்றவர்களை ஞான சூன்யர்கள் என்றால் கவலை இல்லை. ஞான சூன்யர்களைத் திருத்தமுடியும். ஞானவான்களாக்க முடியும். ஆனால், அஞ்ஞானிகளைத் திருத்துவது என்பது மிக மிகக் கடினம்.

என்னைப் பொறுத்தவரையில், நாங்கள் சேர்ந்திருக்கிற இந்தப் பகுதியைப் பொறுத்தவரையில், அரசியல் அனுபவத்தையும், ஆற்றலையும் அதிகமாகப் பெற்றுவிட்டோம் என்று எடுத்துச் சொல்வதற்கு இல்லை. ஆனால், நம் நாட்டில் ஜனநாயகம் குழந்தைப் பருவத்தில் இருக்கும்போதே நாங்கள் அதிகமாகப் பயிற்சி பெறாமல் இருப்பது அதற்கு ஏற்ற காலத்தில் பயிற்சிபெறத் தவறிவிட்டது ஒன்றைத் தவிர, பயிற்சிபெற முடியாது என்பது அல்ல; பயிற்சி பெற்றால், எங்களுக்கு அந்த அறிவு கைகூடாது என்பதும் அல்ல என அரசியல் அனுபவம் பெற்ற தாங்கள் நிச்சயமாக நன்கு உணர்ந்திருப்பீர்கள். அரசியல் துறையில் குழந்தைகளாக எதிர்வரிசையில் உட்கார்ந்திருக்கும் நாங்கள் இந்தச் சபையின் நடவடிக்கைகளில் சட்ட வரம்புக்கு உட்பட்டே செயல்படுவோம் என்றாலும் குழந்தைத்தனமாகச் சிலபல நேரங்களில் தவறுவதும் இயற்கை. அந்த நேரங்களில் தாங்கள் அன்புகூர்ந்து தங்கள் கட்டளைகளைப் புன்சிரிப்போடு கலந்து, கருணையிலே குழைத்து உபயோகிப்பது எங்களை எல்லாம் நல்ல ஜனநாயகப் பண்புடையவர்களாக்கப் பயன்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கிற நாங்கள், ஆளுங்கட்சி செய்கின்ற காரியங்கள் அத்தனையையும் எதிர்ப்போம் என்று அல்ல. ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் உள்ள உறவு, மாப்பிள்ளைக்கும், மாப்பிள்ளைத் தோழர்களுக்கும் உள்ள உறவுபோல இருக்க வேண்டுமென்று கருதிக் கொண்டிருப்பவர்கள் நாங்கள். சிற்சில நேரங்களில் மாப்பிள்ளை, தம்முடைய தோழர்களின் குறும்புகளை வெறுப்பதுபோல, ஆளுங்கட்சியில் உள்ளவர்கள் எங்களைக் கருதக்கூடும். அப்படிப்பட்ட நேரத்தில், நாங்கள் மிகவும் சோர்ந்து போகாமல் இருக்க, தாங்கள் அருள்கூர்ந்து தங்களுடைய நியாயமான தீர்ப்புகளை வழங்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் அரசியல் பெருந்தன்மை நம் நாட்டில்மிகமிக அவசியம்என்பதைநல்லபெருந்தன்மை உடைய தகப்பனாருக்குப் பிள்ளையாயும், நல்ல பெருந்தன்மையுள்ள தொழிலில் ஈடுபட்டவராயும், அரசியல் பெருந்தன்மையை நிலைநாட்டும் பதவிக்கு இன்று தேர்ந்தெடுக்கப்பட்டவராயும் உள்ள தாங்கள் அறிந்திருப்பீர் கள்.

அரசியல் பெருந்தன்மை, கொடுத்து வாங்குவது ஒன்றே தவிர, ஒரே வழியில் செல்கிற வியாபாரம் அல்ல என்று நீங்கள் அறிந்திருப்பீர்கள். அப்படி அரசியல் பெருந்தன்மையைக் கொடுத்து வாங்கவேண்டுமென்ற கொள்கையைத்தான் நாங்கள் கவலையோடு போற்றி வைத்துக் கொண்டிருக்கிறோம். இருந்தும், சிலபல நேரங்களில் தவறுகள் இழைக்க நேரிட்டால், அரசியல் அனுபவம் இல்லாதவர்கள் நாங்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, தவறுகளைத் திருத்தி நல்வழிப்படுத்துகின்ற அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கிற தாங்கள் கொடுக்கும் ஆணைகளுக்கு உட்பட்டு நடப்போம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நாங்கள் எல்லாம் ஒரு விசித்திர அரசியல் கூட்டத்தினர் என்று நீங்கள் அறிவீர்கள்; இந்தச் சபையும் அறியும். நாங்கள் ஒரு விசித்திர அரசியல் கூட்டத்தினர் என்றால் எங்களைத் தோற்றுவித்ததும் நாட்டிலுள்ள ஒரு விசித்திர நிலைமைதான் என்பதை யாவரும் உணர வேண்டும். விசித்திரமான நிலைமைகள் விசித்திரமான கட்சிகளை ஏற்படுத்துகின்றன.

உண்மையிலேயே ஒரேவிதமான உடற்கூறு படைத்தவர்கள் சிற்சில வியாதிகளுக்கு உட்படுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். சிறந்த மருத்துவர் என்ற முறையில் அவர்களுடைய வியாதிக்கு மூலகாரணம் என்ன என்பதைப் பற்றியும் நீங்கள் ஆராய்ந்து சிகிச்சை செய்திருப்பீர்கள். வெளியே தோன்றுகின்ற புறக் குறிகளை மாத்திரம் பார்த்துச் சிகிச்சை அளிக்கக்கூடாது என்பது தங்களுக்குத் தெரியாதது அல்ல. உங்களுடைய பேட்டையில் எத்தனையோ நோயாளிகள் இளைத்தவர்களாக உங்களிடம் வந்து



திடகாத்திரர்களாகத் திரும்பி இருக்கிறார்கள். அவ்வாறு திரும்பிய பல பேர்களிடத்தில் இருந்து நான் அறிந்துள்ளபடி தாங்கள் முதலில் புறத்திலே தோன்றும் குறிகளைக் கண்டு, அக்குறிகளைத் தோற்றுவித்த மூல காரணத்தை உணர்ந்து சிகிச்சை செய்யும் வழக்கத்தை இங்கும் கையாளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாங்கள் படைத்துள்ள நல்ல ஜனநாயகக் கண்ணோட்டத்தோடு எங்களுடைய குறைபாடுகளையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம் நாட்டில் அரசியலில் மட்டும் அல்ல; இரயில் வண்டிப் பிரயாணத்திலும் கூட யார் முதலில் வண்டியில் ஏறி இடம் பிடித்துக் கொள்கிறார்களோ அவர்கள் அடுத்து வருகிறவர்களைத் துரத்துவதைப் பார்க்கிறோம். சட்டமன்றத்திலும் அந்த மனப்பான்மை நீண்ட காலத்திற்கு இருக்கத்தான் செய்யும். பின்னே வருகிறவர்கள் முன்னே வண்டியில் ஏறிக்கொண்டு தங்களை ஏறவிடாமல் தடுக்கின்றவர்களின் மனம்புண்படாமல், மெல்ல உள்ளே ஏறி நுழைந்து கொள்வதைப் போலத்தான் நாங்களும் தட்டுத்தடுமாறி இந்தச் சபைக்குள் நுழைந்து கொண்டிருக்கிறோம். இந்த அரசியல் இரயில் வண்டிக்குள் ஆதிக்கம் வாய்ந்தவர்கள் இருப்பார்கள். அவர்கள் முகம் சுணங்கும் வகையில், அவர்களைப் பார்த்து, காலை மடக்கிக் கொள்ளுங்கள் என்று நாங்கள் சொல்வதற்கு முன்னாலேயே நீங்கள் உங்களுடைய கருணைப் பார்வையினாலேயே அவர்கள் காலை மடக்கிக் கொண்டு எங்களுக்கும் இடந்தரச் செய்யவேண்டும். நியாயத்திற்காக கருணை உள்ளத்தோடு நீங்கள் தீர்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தங்களுடைய ஆட்சியின் கீழ் இந்த மன்றத்தின் கண்ணியம் உண்மையிலேயே சிறப்புறும் என்று சொல்லி இந்தச் சபையின் கண்ணியத்தையும், கௌரவத்தையும் பாதுகாப்பதில் எங்களுக்கும் ஏதாவது பங்கு கிடைக்குமானால் மகிழ்ச்சி அடைவோம் என்று கூறி வணக்கம் தெரிவித்துக்கொள்கிறேன்."

தமிழ்நாடு சட்டமன்ற
நூற்றாண்டு விழா
1921-2021

# தியாகத்தைப் போற்றிடுவோம் !

## முத்தமிழறிஞர் கலைஞர்
### மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்

### 14–8–1972 அன்று நள்ளிரவில் கூடிய சட்டப்பேரவையில் ஆற்றிய விடுதலை நாள் வெள்ளி விழா உரை

1972ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14–ஆம் நாள் நள்ளிரவில் சுதந்திர தின வெள்ளி விழா, கோட்டையில் இரு அவைகளும் இணைந்த கூட்டுக் கூட்டத்தில் காந்தியார் பிறந்த மாநிலத்தைச் சேர்ந்த ஆளுநர் கே.கே.ஷா தலைமையில் ஒரு வண்ணமிகு நிகழ்ச்சியாக நடைபெற்றது.

வண்ண ஒளி விளக்குகளால் சட்டமன்றக் கூடம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மல்லிகை மலர்களால் சட்டமன்றக் கட்டடத்தின் உட்பகுதி அலங்காரம் செய்யப்பட்டிருந்ததால் – அவை முழுவதும் நறுமணம் வீசிற்று. இரவு 10.45 மணிக்கு தமிழக ஆளுநர் கே.கே.ஷா இரு அவைகளின் தலைவர்களாலும், முதல்வர் கலைஞராலும் சட்டமன்ற வாயிலில் வரவேற்கப்பட்டார். “நீராரும்.... ” எனும் தமிழ் வணக்கப் பாடல் ஒலித்தது. அதன் பின்னர் ஆளுநர் கே.கே.ஷா உரையாற்றினார்.

அதையடுத்து சட்டசபைக் கட்சித் தலைவர்கள் எஸ்.ராமசாமி படையாச்சி, ஏ.ஆர். தாமோதரன், டி.என்.அனந்தநாயகி, சா.கணேசன், திருப்பூர்மணி, கே.ராசாராம் நாயுடு, சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம், அவை முன்னவர் நாவலர், மேலவைத் தலைவர் சி.பி.சிற்றரசு, சட்டமன்றத் தலைவர்கே.ஏ.மதியழகன் ஆகியோர் உரையாற்றினர்.

சரியாக – நள்ளிரவு 12 மணிக்கு அவை உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினர். பின்னர், நாட்டு வணக்கத்துடன் விழா நிறைவுற்றது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்த விழாவில் முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை :

“மேதகு ஆளுநர் அவர்களே, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களே, அனைத்துக் கட்சிகளின் தலைவர்களே, அன்பிற்குரிய உறுப்பினர்களே,



இந்திய சுதந்திரத்திற்கு இன்று வயது இருபத்தைந்து, முறுக்கான பருவம். வெற்றித் திருமகளை மணந்து வெள்ளிச் சிரிப்புக் காட்டுகின்ற காளைப் பருவம்.

**" இந்த வீரச் செல்வத்தைப் பெற்றிட**
**விழுப்புண் பெற்றோர்**
**விழிகளை இழந்தோர்**
**உயிரினைத் தந்தோர்**
**உடைமைகள் பறி கொடுத்தோர்**
**சிறை வாழ்ந்தோர்**
**செக்கிழுத்தோர்**
**கஞ்சிக் கலயம் ஏந்தியோர்**
**கல்லறையாக மாறினோர்**
**துப்பாக்கிக் குண்டுக்கு இரையானோர்**
**தூக்குக் கயிறை முத்தமிட்டோர்**
**அனைவரது காலடியிலும்**

அன்றலர்ந்த மல்லிகை தூவி வணங்குகின்றோம்"

அவர்களில் சிலர் சிலையாகிவிட்டனர். சிலர் படமாகிவிட்டனர். சிலர் நம் நெஞ்சில் நிலையாகி விட்டனர்.

நெருப்பாக மூண்டெழுந்த அந்நாள் ஆதிக்கத்தை அன்பு நீரூற்றி அணைத்திட்ட பெருமான் காந்தியண்ணல்—அவர் வழி நின்று தாயக விடுதலைக்குத் தன்னலம் துறந்து களம் புகுந்த தமிழ்நாட்டுத் தானைத் தலைவர் பெருமக்கள்—அணியணியாய்த் திரண்டெழுந்து அந்நிய ஆட்சிதனை தங்கள் வீர மூச்சால் ஊதிக் கலைத்த செந்தமிழ் மறவர் குடிப் பெருமக்கள்!

அவரெல்லாம் சிந்திய வியர்வை வெள்ளம்—பெய்திட்ட குருதி மழை—பொழிந்த கண்ணீர்—

சுதந்திரப் பயிருக்கு உரமாகும்! பயிர் நடுவே களையின்றிப் பாதுகாப்பதற்கும் – நெல்மணிகள் பதராகாமல் பார்த்துத் தடுப்பதற்கும்—நேரம் பார்த்து நீர்ப்பாய்ச்சுதற்கும் – நோய்நொடிகள், பூச்சி புழு அணுகாமல் விரட்டுதற்கும் இந்த இருபத்தைந்து ஆண்டுகள் இடைவிடாது பணியாற்றியுள்ளோம். இயற்கையின் சோதனைகள் எண்ணிலடங்கா! எதிரிகளின் ஆக்கிரமிப்போ இரண்டு மூன்று தடவைகள்!

இத்தனைக்கும் ஈடு கொடுத்தோம்—இணையற்ற வெற்றிச் செய்திதனை இமயத்தின் நெற்றியிலே பொறித்துக் காட்டி இங்குள்ளோர் மட்டுமல்ல எங்குள்ளோர் ஆயினும் எமது ஒற்றுமை காணீர் என்று பறை அறைவித்தோம்.

வெள்ளம் போல் தமிழர் கூட்டம்
உள்ளத்தால் ஒருவரே – மற்று
உடலினால் பலராய்க் காண்பர்
கள்ளத்தால் நெருங்கொணாதே
– என
வையம் கலங்கக் கண்டு –
உள்ளம் துள்ளும் நாள்

இந்த நாள் என்று மகிழ்கின்றோம். "ஆரத் தழுவி அகமலர" கண்டு— "முகமலர" ஒத்தி ஆனந்தப் பள்ளுப் பாடுகின்றோம்!

இருட்குகையில் இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பு ஏற்றி வைக்கப்பட்ட அகல் விளக்கு !

அதனைப் புயலிலும், பெருமழையிலும் அணையாது காக்கின்ற ஐம்பது கோடி மக்களின் கரங்கள் !

அந்தக் கரங்கள், மிகப் பெரும்பாலும் உழைக்கும் கரங்கள்!
சம்மட்டி பிடித்துத் தழும்பு கொண்ட கரங்கள்!
ஏர் ஓட்டிக் காய்ப்பேறிய கரங்கள்!
ஆலையில் சக்கரம் சுழற்றிடும் கரங்கள் !
நூல் நூற்றுத் தருகின்ற கரங்கள்!
பால் கிண்ணம் ஏந்தும் கரம்—பழ ரசக்
கோப்பை எடுக்கும் கரம்—பாதாம்
பிஸ்தா—பச்சை முந்திரி—பொறுக்கும்
கரம்—மிகமிகக் குறைவு!
எல்லாக் கரங்களும் இந்திய மண்ணில் முளைத்த கரங்களே!

அவற்றில் சில கரங்களாகவும் பல மரங்களாகவும் இருப்பானேன் ? ஏற்றத்தாழ்வு இன்னும் இருந்திடவோ இந்தச் சுதந்திரம் பெற்றோம் அன்று ? இல்லை – இல்லை— இல்லவே இல்லை! முல்லை நட்ட கொல்லையிலே கள்ளி முளைப்பானேன் ?

காலில் குத்தித் தொல்லை பல தருவானேன் ?

இந்தக் கேள்விக்கு விடை கண்டிடத்தான் இன்று ஏற்கின்றோம் சபதம்! இனி நம் நாட்டில் கல்லார் இல்லை—

எங்கும் புதுமை ! எதிலும் புதுமை ! அனைத்தும் பொது உடைமை!

அந்நிலை நோக்கப் படிப்படியாய்

உறுதியாக நடை போடும்

நம் அரசு என்பதை நாடறியும்

எத்தனையோ சமதர்மத் திட்டங்கள் கொணர்ந்திங்குச் செயல்படுத்தியுள்ளோம்! இன்று விழா எடுத்துக் கலைந்து விட்டால், விழா நோக்கம் நிறைவாவதில்லை–அதனாலே சில மகிழ்ச்சிச் செய்திகள் சொல்லுகின்றேன்.

பேருந்துத் தொழில் முழுதும் ஐந்தாண்டு காலத்திற்குள் பொதுத் துறையாய் ஆக்குவதற்கு இன்று முதல் முயற்சி எடுக்கப்படும்–விவரங்கள் பின்னர் வெளியிடப்படும்– ஏற்கெனவே அறிவித்தவாறு பொதுத் துறையில் தொழிலாளர்கட்கு முதலீட்டில் இருபத்து நான்கு சதவீகிதம் பங்கு ஒதுக்கப் பெறுமென்ற முடிவினையும் இந்நாளில் தெரிவிக்கின்றேன். (கரவொலி)தமிழ்நாட்டில் விடுதலைப்போர் வீரர்க்கு மூன்று திங்கள் சிறை சென்றோர் பட்டியல்படி இப்போது 7,300 பேருக்கு மாதந்தோறும் ரூபாய் ஐம்பது மானியமாய் வழங்குகின்றோம். அவர்தம் கோரிக்கை நிறைவேற்ற – சுதந்திரமடைந்த இருபத்தைந்தாம் ஆண்டு நினைவாக–இனிமேல் இருபத்தைந்து ரூபாய் உயர்த்தி எழுபத்து ஐந்தாக வழங்கப்படுமென அறிவிக்கின்றேன். ( கரவொலி )இந்த விழா நாளையொட்டி – சிறைவாழ் கைதிகட்குத் தண்டனைச் சலுகைகளைத் தெரிவிக்கின்றேன்.பத்தாண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றோருக்கு ஒன்றரை ஆண்டுகாலம் தண்டனைக் குறைப்பு;

ஐந்தாண்டுக்கு மேல் பத்தாண்டுக்குள் தண்டனை பெற்றோருக்கு ஒன்பது மாதம் தண்டனை குறைப்பு ஓராண்டுக்கு மேல் ஐந்தாண்டுகள் வரை நாலரை மாதம் தண்டனை குறைப்பு. மூன்று மாதங்களுக்கு மேல் ஓராண்டு வரை தண்டனை பெற்றோர் பாதிக் காலத் தண்டனை அனுபவித்திருப்பின் மீதிக் காலத் தண்டனை குறைக்கப்பட்டு விடுதலையாவர். அதே கைதிகள் பாதிக் காலத் தண்டனை அனுபவிக்காதிருந்தால் மூன்று மாத காலத் தண்டனை குறைப்பு. மூன்று மாதமும் அதற்குக் குறைவாகவும் தண்டனை பெற்றோர் அனைவருமே விடுதலையாவர்.

நாளை காலையிலே சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட கைதிகள் விடுதலையாவர் என்ற செய்தியினையும் மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன். மற்றொரு மகிழச்சிகரமான செய்தி, தமிழக மக்களைப் பூரிப்பில் ஆழ்த்துகின்ற புதுச் செய்தி, சிலை வைத்துள்ளோம் சிதம்பரனார்க்குச் சென்னைக் கடற்கரையில் ! செப்டம்பர் திங்கள் அந்தச் செந்தமிழன் சிலைதனையே திறக்க வருகின்றார் – நம் அன்புக்குரிய பிரதமர் தூத்துக்குடிக்கு ! சிலையான தமிழர் சிதம்பரனார் இழுத்திட்ட செக்கொன்று கோவைச் சிறையினிலே கேட்பாரற்று கிடக்கின்ற சேதிதனை அறிவீரோ என்னவோ நானறியேன் ! அந்தச் சிங்க மறவன் இழுத்த செக்கினை இங்குச் சென்னைக்குக் கொணர்ந்து சிறப்பான இடமொன்றில் காட்சிப் பொருளாய் ஆக்குதற்குத் திட்டம் தீட்டி விட்டோம். இத் திங்கள் முடிவதற்குள் இனிதுநிறைவேறும் அந்தக் காரியம் என்று கூறுகின்றேன்.

தியாகத்தின் சின்னமன்றோ அந்தச் செக்கு !

தியாகத்தை மதிப்பதன்றோ நம் அரசு !

தில்லையாடி வள்ளியம்மைக்குத் திருநகர் அமைத்த தன்றோ தமிழ் அரசு!

அதனாலே தியாகத்தைப் போற்றிடுவோம்!

தியாகிகளைத் தெய்வமெனத் தொழுதிடுவோம்!

மண் காக்கும் இமைபோல வாழ்ந்து

வீழ்ந்துபட்ட வீரர் குல நாயகர்க்கு

இந்நாளில் அனைவருமே வணக்கம் செய்வோம்! (கரவொலி)

# நள்ளிரவில் வெள்ளிவிழா ஏன்?

1947–ம் ஆண்டு ஆகஸ்ட் 15–ஆம் நாள்! இந்தியாவின் வரலாற்றில் ஒரு பொன்னாள்! ஏறத்தாழ 200 –ஆண்டு காலம் இந்தியாவில் நடந்து வந்த பிரிட்டிஷ் ஆட்சி முடிவடைந்து, இந்தியா சுதந்திரம் அடைந்தது!

ஆட்சிப் பொறுப்பை இந்திய மக்களிடம் ஒப்படைக்கும் விழா ஆகஸ்ட் 14 –ந்தேதி நள்ளிரவு 12 மணிக்கு ( 15 –ந்தேதி தொடங்குகிற நேரம் ) டெல்லியில் பாராளுமன்ற மத்திய மண்டபத்தில் நடந்தது.

அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் இரவு 11 மணிக்கே மத்திய மண்டபத்தில் கூடியிருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. அதன்படி, அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் கூடினார்கள். 11 மணிக்கு வரலாற்றுச் சிறப்பு மிக்க விழா தொடங்கியது.

முதலில் சுசேதா கிருபளானி "வந்தே மாதரம்" கீதத்தைப் பாடினார். இராஜேந்திர பிரசாத் தலைமை உரை நிகழ்த்தினார். பிறகு, "நள்ளிரவு 12 மணிக்கு இந்தியா சுதந்திரம் அடைகிறது. இங்கே கூடியுள்ள அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்கள், இந்தியாவின் சேவைக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொள்வதாக உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று நேரு அறிவித்தார். அதன்படி. அவர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

அதன் பிறகு அவர் அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார். அவர் பேச்சின் சுருக்கம் வருமாறு :–

" இதோ இன்னும் சிறிது நேரத்தில் நள்ளிரவு 12 மணி அடித்ததும், உலகம் உறங்கிக் கொண்டிருக்கும் வேளையில் இந்தியா விழித்தெழுந்தது, சுதந்திர நாடாகத் தலைநிமிர்ந்து நிற்கும்.

பழமையை விடுத்து நாம் புதுமைக்குள் நுழையும் தருணம்; ஒரு சகாப்தமே முடிந்து மறையும் தருணம் ; நீண்ட நெடுங்காலம் அடக்கப்பட்டு மவுனித்துக் கிடந்த ஒரு நாடு மறுமலர்ச்சி அடையும் தருணம் ; வரலாற்றிலேயே அபூர்வமாக –அரிதாகத்தோன்றும் தருணம் ; இதோ நம் கண் முன் தெரிகிறது.

இந்தத் தருணத்தில் இந்தியாவின்– இந்திய மக்களின் சேவைக்காகவும், மனித குல மேம்பாடு என்ற பரந்த லட்சியத்திற்காகவும் நம்மை அர்ப்பணித்துக் கொள்ளச் சூளுரை ஏற்போம். வரலாற்றின் தொடக்கத்திலிருந்தே, இந்தியா தனது முடிவே இல்லாத தேடுதலைத் தொடங்கியது. எந்த நிலையிலும், இந்தத் தேடுதலையோ, லட்சியத்தையோ இந்தியா கைவிட்டது இல்லை. துரதிர்ஷ்டவசமான ஒரு காலகட்டம் இப்போது முடிகிறது. இந்தியா மீண்டும் தன்னைச் சுயதரிசனம் செய்ய இருக்கிறது. இன்று நாம் கொண்டாடுகிற சாதனை, ஒரு சிறிய முன்னேற்றத்தையே குறிக்கிறது. நம்மை எதிர்நோக்கியுள்ள பெரிய வெற்றிகளுக்கும், சாதனைகளுக்கும் ஒரு ஆரம்பத்தையே இந்த முன்னேற்றம் குறிக்கிறது.

சுதந்திரம் உதயமாவதற்கு முன்னர் நாம் எல்லா வகையான துன்பங்களையும் சகித்துக்கொண்டோம். சில துன்பங்கள் இப்போதுங்கூட நிழலாடுகின்றன. எனினும் கடந்த காலம் முடிந்து விட்டது. இப்போது, வருங்காலமே நம்மை அழைக்கிறது. எனவே, நம் கனவுகள் நிறைவேறிட நாம் கடுமையாக – இன்னும் கடுமையாக உழைக்க வேண்டும்" இவ்வாறு நேரு கூறினார்.

பின்னர் டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணனும் மற்றும் பலரும் பேசினார்கள்.

இந்தியப் பெண்கள் சார்பாக, அசோக சக்கரம் பொறித்த தேசியக் கொடியை நேருவிடம் திருமதி ஹம்சா மேத்தா வழங்கினார்.

### நேரு பதவி ஏற்றார்

நள்ளிரவு சரியாக 12 மணிக்குச் சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக நேரு பதவி ஏற்றார். ஆட்சிப்பொறுப்புகளை அவரிடம் கவர்னர் ஜெனரல் மவுண்ட்பேட்டன் ஒப்படைத்தார். சுதந்திர இந்தியாவுக்கு இங்கிலாந்து மன்னர் ஆறாம் ஜார்ஜ் அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியை, மவுண்ட் பேட்டன் படித்தார். விழா முடிவில், "ஜன கன மன"தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

### கொடி ஏற்றினார்

டெல்லி செங்கோட்டையில் பிரிட்டனின் " யூனியன் ஜாக் " கொடி இறக்கப்பட்டது. சுதந்திர இந்தியாவின் மூவர்ணக்கொடியை நேரு பறக்கவிட்டார். செங்கோட்டை முன் கூடியிருந்த லட்சக்கணக்கான மக்கள், " மகாத்மா காந்திக்கு ஜே", "நேருவுக்கு ஜே", "இந்திய சுதந்திரம் வாழ்க" என்று குரல் எழுப்பினர்.

அன்று அப்படி நள்ளிரவில் பெற்ற நம் சுதந்திரத்தை நினைவுகூரும் வகையில்தான் 14.8.1972 அன்று அன்றைய முதலமைச்சர் கலைஞர் சுதந்திரதின வெள்ளிவிழாவை நள்ளிரவில் கொண்டாடினார்.




**ந. ரங்கசாமி**
முதலமைச்சர்
புதுச்சேரி அரசு


பாண்டிச்சேரி

தேதி : 3.8.2021

<u>*வாழ்த்துச் செய்தி*</u>

*தமிழக சட்டப்பேரவையின் நூற்றாண்டு விழா மற்றும் தமிழக முன்னாள் முதலமைச்சர் டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழா 02.08.2021 அன்று நடைபெற உள்ளதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.*

*தமிழக மக்களின் நலனிற்காகவும், மக்களின் மேம்பாட்டிற்காகவும் தமிழக சட்டப்பேரவை தொடர்ந்து இயங்கி நூற்றாண்டைக் கண்டிருக்கிறது. தலைசிறந்த தலைவர்கள் பலர் முதலமைச்சர்களாக திறம்பட செயலாற்றி மக்களின் சேவைக்காகப் பாடுபட்ட இந்த தமிழக சட்டப்பேரவை நூறாண்டுகள் கண்டிருப்பதை எண்ணிப் பார்க்கும்போது பெருமிதமும் பேருவகையும் ஏற்படுகிறது.*

*மறைந்த முன்னாள் முதலமைச்சர் டாக்டர். கலைஞர். மு. கருணாநிதி அவர்கள் பொதுவாழ்க்கையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டு. வரலாற்று சிறப்பு வாய்ந்த தமிழக சட்டப்பேரவைக்கு 13 முறை மக்களால் தேர்வு செய்யப்பட்டு சட்டப்பேரவை உறுப்பினராகவும், 5 முறை முதலமைச்சராகவும் சிறப்பாக செயல்பட்டு மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர். அத்தகைய பெருமை வாய்ந்த தலைவருக்கு தமிழக சட்டப்பேரவையில் அவரது திருவுருவப் படத்தை மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களின் பொற்கரங்களால் திறந்து வைப்பது பெருமைக்குரிய ஒன்றாகும். தமிழக முதல்வர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களின் முன்முயற்சியால் இந்த நிகழ்ச்சி நடைபெறுவது சாலப் பொருத்தமான ஒன்றாகும்.*

*இத்தகைய வரலாற்று சிறப்பு வாய்ந்த விழா மிகப் பெரிய வெற்றி பெறவும், விழாவை முன்னிட்டு வெளியிடப்பட உள்ள விழா மலர் சிறப்பாக அமைந்திடவும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**(ந. ரங்கசாமி)**

# சட்டமன்ற ஜனநாயகம் பேணிப் பாதுகாப்போம் !

**மாண்புமிகு மு.க.ஸ்டாலின்**
**தமிழக முதலமைச்சர்**

**பேரவைத் தலைவர், துணைத்தலைவர் ஆகியோரைப் பாராட்டி**
**12–5–2021 அன்று 16–வது பேரவையில் ஆற்றிய முதல் உரை**

"மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வரிகளுக்கு இலக்கணமாக விளங்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம், நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பெற்று, ஆட்சி அமைக்க ஆதரவுக் கரம் நீட்டிய தமிழக மக்கள் அனைவருக்கும் தங்கள் மூலமாக எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





“செந்தமிழால் செய்த உடல்! செங்கோலால் செய்த விரல்!

வெண்கலத்தால் செய்த குரல்! வெற்றிகளால் செய்த கழல்!

சங்கநூல் செரித்த குடல்! சரித்திரத்து ஞானக் கடல்!

நெஞ்சமெல்லாம் தமிழ் அன்னை! நினைப்பதெல்லாம் தமிழன்னை”

– என்று கவிஞர் தணிகைச் செல்வனால் போற்றப்பட்ட முத்தமிழ் அறிஞர் நம் நெஞ்சமெல்லாம் அன்றும் இன்றும், என்றும் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி என்னுடைய உரையை நான் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் (திரு.மு.அப்பாவு) அவர்களே,

தாங்கள் இந்த இருக்கையில் அமர்ந்து இருப்பதைப் பார்க்கும்போது என் நெஞ்சம் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எந்த அளவுக்குத் தாங்கள் உணர்ச்சிமயமாக இப்போது அமர்ந்திருக்கிறீர்களோ,அதைவிட அதிகமாக நான் உணர்ச்சியும், பெருமையும், பூரிப்பும் அடைந்து கொண்டிருக்கிறேன். இங்கே எல்லோரும் குறிப்பிட்டுச் சொன்னார்கள்.அனைத்துத் தொலைக்காட்சி விவாத மேடைகளிலும் கம்பீரமாக உட்கார்ந்து, பல்வேறு விவாதங்களில் பங்கெடுத்து, கருத்தோடும், சுவையோடும் பேசக்கூடிய தங்களது விவாதங்களைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருக்கக்கூடியவன் நான். அந்த வகையில் ஆக்க பூர்வமான விவாதத்திற்குப் புகழ்பெற்ற ஜனநாயக மன்றமாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சட்டமன்றத்தினுடைய பேரவைத் தலைவராகத் தாங்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது மிகுந்த பெருமையளிப்பதாக எங்களுக்கெல்லாம் இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஏற்றிருக்கும் பேரவைத் தலைவர் பொறுப்பு “நாட்டின் சுதந்திரம் மற்றும் விடுதலையின் சின்னம்” என்று இந்தியாவின் முதல் பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சொன்னார்கள். “அவைத் தலைவர் பேரவையைக் குறிப்பவர். அவையினுடைய கண்ணியம், சுதந்திரத் தன்மை ஆகியவற்றின் அடையாளம் பேரவைத் தலைவர்” என்று நேரு அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அந்தச் சுதந்திரத்தின், ஜனநாயகத்தின் அடையாளமாகத் தாங்கள் வீற்றிருக்கிறீர்கள். கதர் அணிந்து நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். தூய்மையின் அடையாளமாக, வெள்ளை உள்ளத்தின் அடையாளமாக இந்த மன்றத்தின் உறுப்பினர்களுக்கெல்லாம் நீங்கள் இன்றைக்குக் காட்சிதந்து கொண்டிருக்கிறீர்கள். இந்த 16–வது சட்டமன்றத்தில் தாங்கள் பேரவைத் தலைவராக அமர்ந்திருப்பது இந்த மாபெரும் மன்றத்திற்குப் பெருமையளிப்பதாக அமைந்திருக்கின்றது.

இந்த மாமன்றத்தில் இருந்த பேரவைத் தலைவர்கள் அனைவரும் இந்த அவைக்குப் பல்வேறு பெருமைகளைச் சேர்த்துத் தந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தென் மாவட்டத்தைச் சார்ந்தவர்களே அதிகமாகப் பேரவைத் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். தென் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் மாண்புமிகு திரு.எஸ்.செல்லபாண்டியன் அவர்கள், மாண்புமிகு திரு. சி.பா.ஆதித்தனார் அவர்கள், மாண்புமிகு திரு.பி.எச்.பாண்டியன் அவர்கள், மாண்புமிகு முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அவர்கள், மாண்புமிகு திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள், மாண்புமிரு திரு, பி.டி. ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள், மாண்புமிகு திரு.கா.காளிமுத்து அவர்கள், மாண்புமிகு திரு.இரா.ஆவுடையப்பன் அவர்கள், தற்போது தாங்கள் பேரவைத் தலைவராகத்

தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். இந்தப் பேரவையை ஜனநாயக மாண்புடன் நடத்திடும் திறமை படைத்தவர்களாகப் பேரவைத் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். தாங்களும் இந்தப் பேரவையை ஜனநாயக ரீதியில், அந்த மரபு வழி நின்று நிச்சயம் நடத்துவீர்கள் என்பதில் யாருக்கும் எள்ளளவும் சந்தேகமில்லை.

இந்திய நாட்டினுடைய விடுதலைக்குப் பிறகு 1952 – ஆம் ஆண்டு நடந்த முதல் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்களைக் கொண்ட முதல் சட்டமன்றம் கூடிய இடம்தான் இந்த இடம்; மொழிவாரியாக மாகாணங்களைப் பிரிப்பதற்கு முன்னதாக 375 உறுப்பினர்கள் சென்னை ராஜதானியில் இருந்ததால், அனைவரும் உட்காரக்கூடிய வசதியுடன் புதிய பேரவைக் கட்டடம் அரசினர் தோட்டத்தில் அப்போது கட்டப்பட்டது, அதில்தான் முதல் ஐந்தாண்டு காலம் பேரவை நடந்திருக்கிறது. மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான உறுப்பினர் எண்ணிக்கை குறைந்த பிறகு செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் மீண்டும் சபை நடவடிக்கைகள் நடந்தன. அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் கூட்டப்பட்டுள்ள இந்தக் கூட்டத்தில் தாங்கள் பேரவைத் தலைவர் இருக்கையில் அமர்ந்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரியது; மகிழ்ச்சிக்கு உரியது; பெருமைக்குரியது. உள்ளத்தால், அறிவாற்றலால், செயல் திறத்தால் வளர்ந்த தங்கள் தலைமையிலான இந்த அவையிலே நாங்கள் செயல்படுவதை ஒரு பொற்காலமாகக் கருதிக் கொண்டிருக்கிறோம்.

நெல்லை மாவட்டம், காவல்கிணறு என்ற ஊருக்கு அருகில் இருக்கக்கூடிய லெப்பை குடிகாடு என்ற ஊரில் பிறந்த தாங்கள் பள்ளி ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கியிருக்கிறீர்கள். காவல் கிணறு திரு.இருதய மேல்நிலைப் பள்ளியில் கணிதம் மற்றும் ஆங்கில ஆசிரியராக இருந்து, அரசியல் ஈடுபாட்டின் காரணமாக ஆசிரியர் வேலையை விட்டு விலகி, அரசியல் பணிக்கு வந்திருக்கிறீர்கள். மாணவர்களுக்கு ஆசிரியராக இருந்த தாங்கள், இப்போது 234 சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட இந்தப் பேரவைக்குத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, நான்காவது முறை வெற்றி பெற்றுள்ள தங்களுக்குச் சூட்டப்பட்டிருக்கிறது இந்த மகுடம் .

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் உங்கள் உத்தரவுகளுக்கு, கட்டளைகளுக்கு, கண்ணசைவுக்குக் கட்டுப்பட்டு நிச்சயமாகச் செயல்படுவோம். "சட்டசபையை அதிகார அமைப்பாக இல்லாமல், சமூகத்துக்கு நன்மை செய்யும் அமைப்பாகக் கருத வேண்டும்". இதை யார் சொன்னது ? தந்தை பெரியார் அவர்கள். எனவே, அவர் வழிவந்திருக்கக்கூடியவர்கள் நாங்கள்! இங்கேகூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். "ஜனநாயக நாட்டில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பவை ஒரு நாணயத்தினுடைய இரு பக்கங்கள். இதில் ஒரு பக்கம் சரியாக இருந்து, மறுபக்கம் சிதைந்து போயிருக்குமென்று சொன்னால், அந்த நாணயம் செல்லாக் காசாகி விடும்." இதை இதே பேரவையில்தான் அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அவருடைய தம்பிமார்கள் தான் நாங்கள்.

"ஒரு மனிதனின் முகத்தில் உள்ள நிறைகளை மட்டுமல்ல, குறைகளையும் காட்டுவதுதான் கண்ணாடி. அது போல் ஆளுங்கட்சியினுடைய நிறை குறைகளைக் காட்டுவதுதான் சட்டமன்றம்" என்று சொன்னவர் யார் தெரியுமா ? எங்கள் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கருத்துகளைக் கருத்துகளால் எதிர்கொள்ளும் வல்லமை எங்களுக்கு உண்டு. ஆனால், அதில் கர்வமோ, ஆணவமோ இருக்காது. ஜனநாயகமும். மரபுகளும் நிச்சயமாக அதிலே இருக்கும். எந்தக் காரணத்தைக் கொண்டும் ஆணவம் இருக்காது. கர்வம் இருக்காது. ஜனநாயகம்தான் இருக்கும். மரபுகளும் கடைப்பிடிக்கப்படும் என்பதை உறுதியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தோல்வியில் துவள்வதும், வெற்றியில் இறுமாப்புக் கொள்வதும் எங்களுடைய வழக்கமல்ல. அப்படி எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் எங்களை வளர்க்கவும் இல்லை. ( மேசையைத் தட்டும் ஒலி ) ஆகவே, தமிழக மக்கள் அளித்திருக்கக்கூடிய இந்த மாபெரும் வெற்றி, எங்களை மேலும் மேலும் அடக்கமுள்ளவர்களாக ஆக்கி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கட்டுப்பாட்டோடு இருப்பதோ, அடக்கத்தோடு இருப்பதோ சட்டமன்றத்தினுடைய ஜனநாயகத்தைக் காப்பாற்றிடவே. அதை எந்தவிதத்திலும் பலவீனமாக யாரும் கருதிடக்கூடாது. இவை அனைத்தையும்